www.nunnarivu.com

நீதியின் நுண்ணறிவு

புலனாய்வு இதழ்

NEETHIYIN NUNNARIVU

புலனாய்வு இதழ்

மலர் : 7 | இதழ் : 01 | அக்டோபர் : 2026 | தமிழ் மாதஇதழ் | விலை : ரூ.15/-

Volume : 7 | Issue : 01 | October : 2026 | Tamil Monthly Magazine | Price : Rs.15/-

பெண்களை கவரும் வெற்றி பயணம் திட்டம்! முதல்வர் தொடங்கி வைத்தார்



சாதனை படைத்து வரும் டாக்டர் கே.கார்த்திகேயன் I.P.S.

கல்லூரி மாணவி கூட்டுபாலியல் கொலை?



முதல்வர் விஜய் அரசு நீதி வழங்குமா?


SS AQUA
TECHNOLOGIES
SWIMMING POOL, JACUZZI & STEAM,
FOUNTAINS, LANDSCAPING & IRRIGATION
The pool gives good vibes
+ 91 96264 34377
www.ssaquatechnologies.com


SODEX
Floor Cleaner
Sandal
Liquid Laundry Detergent
SODEX
Toilet Cleaner
Active Formula
5 in 1
SODEX
DISHWASH
LIQUID
SODEX
Fabric Softener
SODEX
Clean & Care.
Manufactured & Marketed By:
ECOGUARD LABS
Plot # 14, Rojambal Nagar Kanna puram, Mugaglivakkam Chennai 600125
Contact: 95000 76229 / 95000 76411
பொருளோ தரம்
வீட்டிற்க்கோ சுகாதாரம்!!

www.nunnarivu.com
நீதியின் நுண்ணறிவு
NEETHIYIN NUNNARIVU
புலனாய்வு இதழ்

ஆசிரியர் வெளியீட்டாளர்
R.சிவக்குமார்

இணை ஆசிரியர்கள்
J.கணேசபாண்டி, A.விஜய்,
G.ஜெயபிரகாஷ்நாராயணன்

துணை ஆசிரியர்கள்
D.சிவராஜ், K.பாரதிராஜா, G.சுரேந்திரன்,
B.காந்திநாதன், S.ராஜ்நாராயணன்,

கௌரவ ஆலோசகர்கள்
A.கந்தசாமி. S.P.
காவல்துறை கண்காணிப்பாளர்(ஓய்வு)
சுபாஷ் சந்திரபோஸ்
காவல் துணை கண்காணிப்பாளர் (ஓய்வு)
Dr.K.முருகேசன்.M.B.B.S., D.L.O.,
மா.செல்வராஜ்
(முன்னாள் முதல்வர் – குருநானக் கல்லூரி)
(மாநில தகவல் ஆணையர்)
சோம்புராஜன்
கூடுதல் ஆணையர் தெழிலாளர்துறை (ஓய்வு)
டாக்டர். மணிவண்ணன்.B.S.M.S.

முதன்மை நிருபர்கள்
R.இன்பசேகரன், R.சதீஷ்குமார்,
V.மாதவன், A.ராஜ்மோகன்,

நிருபர்கள்
G.மோகன், S.சாம்எட்வின்,
C.சரவணன், S.சஞ்சய்குமார்,
A.மதிமாறன், மு.ஜசக், கணேசன்,
P.கோகுல்நாதன், P.பிரம்மநாயகம்,
தங்கபாண்டியன், ராமமூர்த்தி

சட்ட ஆலோசகர்கள்
R.வீரராகவன்.BSc., M.B.M., LL.B.,
K.M.S.செந்தில்குமார்.BSc., B.L.,
S.சரவணன்.M.Sc., B.L.,M.A.,

வடிவமைப்பு : சீயோன் கிராப்பிக்ஸ்

நிர்வாக அலுவலகம்:
எண்.14/88, வெங்கடேஸ்வரா நகர்,
3வது மெயின் ரோடு,
வேளச்சேரி, சென்னை – 42.
nunnarivuidhal@gmail.com
www.nunnarivu.com

Allrights reserved legal jurisdiction in chennai city court only. Nothing in **NEETHIYIN NUNNARIVU** is intended to defame any person. But expressed in good faith pursuit of truth and public good.

ஆசிரியர் பக்கம்

தடையற்ற தானியங்கி சுங்கக் கட்டண முறை

பரனூர் சுங்கச்சாவடியில் தமிழ்நாட்டின் முதல் தடையற்ற தானியங்கி சுங்கக் கட்டண முறை அறிமுகம் செய்யப்பட்டு உள்ளது

தமிழ்நாட்டில் தேசிய நெடுஞ்சாலை 179பி தாம்பரம் – திண்டிவனம் பிரிவில் உள்ள பரனூர் சுங்கச்சாவடியில், தமிழ்நாட்டின் முதல் பல்தட தடையற்ற தானியங்கி சுங்கக் கட்டண முறை செயல்படுத்தப்பட்டது. வாகனங்களை நிறுத்தாமல் சுங்கச்சாவடிகளைக் கடந்து செல்ல வழிவகுக்கும் தடையற்ற சுங்கக் கட்டண முறை அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது

சுங்கக் கட்டணம் வசூலிப்பதில் மனிதத் தலையீட்டைக் கணிசமாகக் குறைத்து, எரிபொருளையும் நேரத்தையும் சேமிக்கிறது. மேலும் போக்குவரத்து நெரிசலைக் குறைத்து, சுங்கச் செயல்பாடுகளை வெளிப்படையானதாகவும் செலவு குறைந்ததாகவும் ஆக்குகிறது. இது தேசிய நெடுஞ்சாலைகளில் வாகனங்களில் பயணிப்போருக்கு 'பயண எளிமையை' மேம்படுத்தி, தடையற்ற, சுமூகமான பயணத்தை வழங்கும். தடையற்ற, திறன் வாய்ந்த சுங்கச்சாவடி செயல்பாடுகளை உறுதி செய்வதற்காக, தானியங்கி வாகன எண் அறிதல், ஃபாஸ்டேக் போன்ற தொழில்நுட்பங்களை இது பயன்படுத்துகிறது.

இதுபோன்ற பொதுமக்களுக்கு பயன்படும் தொழில் நுட்பங்களை பல்வேறு துறைகளிலும் அறிமுகம் செய்து பொதுமக்களின் நேரத்தையும், காலத்தையும் மிச்சப்படுத்தும் வகையில் அரசாங்கங்கள் தொடர்ந்து செயல்பட வேண்டும்.



ஆசிரியர்
R.சிவக்குமார்

பெண்களை கவரும் வெற்றி பயணம் திட்டம்! முதல்வர் விஜய் தொடங்கி வைத்தார்

பொதுமக்களின் அதிருப்தியும் ஆலோசனைகளும்!

தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்கள், தமிழக சட்டப்பேரவை கூட்டத்தொடரில் 110 விதியின் கீழ் 'தமிழகத்தில் எந்தப் பகுதியிலும் வசிக்கும் ஒவ்வொரு மகளிரும் போக்குவரத்துக் கட்டணத்தால் தமது வாய்ப்புகளை இழக்கக் கூடாது என்ற சமூக நீதிச் சிந்தனையை தவெக அரசு முதன்மையாகக் கொண்டுள்ளது. இதைக் கருத்தில் கொண்டு, மகளிர் கட்டணமில்லாப் பயணத் திட்டத்தை விரிவுபடுத்தி, பெருமளவில் பயனளித்திடும் விதமாக, 'வெற்றிப் பயணம்' என்ற பெயரில், காந்தியடிகள் பிறந்த நாளில் செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது' என்று தெரிவித்தார்



இந்த வெற்றி பயணம் திட்டத்தை முதல்வர் விஜய் சென்னை கோயம்பேடு பேருந்து நிலையத்தில் காந்தி ஜெயந்தி அன்று தொலைதூர பேருந்துகளிலும் மகளிர் கட்டணம் இல்லாமல் செல்லும் வகையில் 'வெற்றிப் பயணம்' திட்டத்தை தொடங்கி வைத்தார்

பேருந்தில் இருந்த பெண்களுக்கு பேருந்து பயணத்துக்கான டிக்கெட்டுகளை அவரே வழங்கினார். அப்போது அவரிடம் பேருந்தில் இருந்த பெண்கள் நலம் விசாரித்தனர். முதல்வரிடம் பயணச்சீட்டு பெற்றவுடன் உற்சாகமாக மகிழ்ச்சியில் துள்ளி குதித்து முதல்வருடன் செல்ஃபி எடுத்து மகிழ்ந்தனர்

இந்தத் வெற்றி பயணம் திட்டத்தின் மூலம் மாநகரம், நகரங்களில் சாதாரணப் பேருந்துகள் மட்டுமின்றி மாநகரம், நகர்ப்பகுதிகளில் இயங்கும் எக்ஸ்பிரஸ், எல்எஸ்எஸ், டீலக்ஸ் அரசுப் பேருந்துகளிலும், மகளிர் இலவசமாகப் பயணிக்கலாம். மேலும் கூடுதலாக, மாவட்டங்களுக்கிடையே பயணம் மேற்கொள்ள ஏதுவாக புறநகர் மற்றும் மலைப்பகுதிகளில், சாதாரணக் கட்டணப் பேருந்துகளிலும் இத்திட்டம் பொருந்தும்

7 போக்குவரத்து கழகங்கள் மூலமாக இயக்கப்பட உள்ள 12,695 பேருந்துகளில், 1,68,500 தினசரி நடைகளில் தினமும் 84.32 லட்சம் பெண்கள் மற்றும் திருநங்கைகள் பயன் பெறுவார்கள் என போக்குவரத்து துறை அறிவித்து உள்ளது. தமிழக முதல்வர் ஜோசப் விஜய் காந்தி ஜெயந்தி அன்று தொடங்கி வைத்த வெற்றிப் பயணம் தமிழகத்தில் உள்ள அனைத்து தரப்பு பெண்களிடமும் மிகப்பெரிய வரவேற்பை பெற்றுள்ளது.

இத்தகைய வரவேற்பை பெற்றுள்ள வெற்றிப் பயணம் திட்டம் குறித்து மக்கள் தொகையில் பாதியளவு இருக்கும் ஆண் பயணிகளிடம் கடும் எதிர்ப்பை சம்பாதித்து உள்ளது. இதுகுறித்து பேருந்தில் பயணம் செய்யும் ஆண் பயணிகள் கூறுகையில், இந்த பேருந்தில் பயணம் செய்யும் பெண்கள் பெரும்பாலும் சாதாரண ஏழைகள் மற்றும் சாமானிய பெண்கள் இருந்தாலும் ஓரளவு நல்ல குடும்ப சூழ்நிலையில் இருந்து கணவன் மற்றும் பிள்ளைகள் ஆகியோரும் வேலைக்கு செல்பவர்களாகவும், தாங்களே வேலைக்கு செல்பவர்களாகவும், நல்ல வருமானம் உள்ளவர்களாகவும், அலுவலகத்தில் ஓரளவு நல்ல பதவியில் உள்ளவர்களும் உள்ளனர்.

இன்றைய காலை கட்டத்தில் பெண்களுக்கு அதிக அளவில் முன்னுரிமை வழங்கப்பட்டு அனைத்து நிறுவனங்களிலும் வேலை வழங்கப்படுகிறது.

பள்ளி படிப்பு வரை மட்டுமே படித்த ஏழை

இளைஞர்கள் பெரும்பாலும் கூலி வேலை என்று கூறப்படும் தினக்கூலி, வாரக் கூலி, அந்த குறிப்பிட்ட ஒப்பந்த பணிக்கான கூலி பெருபவர்களாகவே உள்ளனர்.

மேலும் கல்லூரி படிப்பு வரை படித்த ஆண்களுக்கு பெரும்பாலும் மிகவும் கடினமான பணிகள் மட்டுமே, அதுவும் குறிப்பிட்ட வயது வரை மட்டுமே கிடைக்கின்றது. குறிப்பிட்ட வயதை தாண்டிய ஆண்கள், உதாரணமாக 40 வயதை கடந்து விட்டால் அவர்களுக்கு புதிதாக எந்த நிறுவனங்களிலும் வேலை வாய்ப்பு கிடைப்பதில்லை. அந்த வேலையை 20 25 வயது இளைஞர்களுக்கு வழங்கவே பெரும்பாலும் நிறுவனங்கள் விரும்புகின்றன. எனவே பல்வேறு காரணங்களால் தாங்கள் இதற்கு முன்பு செய்த வேலையை இழந்த ஆண்கள் பணம் சம்பாதிக்க மிகவும் கஷ்டப்பட்டு குறைந்த ஊதியம் பெற்று உழைத்து வருகின்றனர். இந்த பயணிகள் தனியாக வாகனங்கள் எதுவும் பயன்படுத்துவதில்லை. அவர்கள் அரசின் பொதுப் போக்குவரத்தை நம்பியுள்ளனர். எனவே இவர்கள் தங்களின் கோரிக்கையாக 50 வயதை கடந்த ஆண்களுக்கு பாஸ் வழங்கும் வகையில், ஆதார் கார்டு அடிப்படையில் 50 வயதை கடந்த அனைத்து ஆண் பயணிகளுக்கும் மாதாந்திர பாஸ் வழங்கி பேருந்தில் இலவச பயணம் செய்ய அரசு உத்தரவிட வேண்டும் என்று கோரிக்கையை விடுத்துள்ளனர். மேலும் 50 வயதை கடந்த ஆண் பயணிகள் மற்ற அரசியல் கட்சிகளை விட்டுவிட்டு முதல்வர் விஜய் அவர்களுக்கு இதன் மூலம் பெரிய அளவில் ஆதரவு அளிப்பார்கள் என்று தெரிவிக்கின்றனர். ஏற்கனவே இளைஞர்களின் ஆதரவை முழுமையாக பெற்றுள்ள முதல்வர் விஜய் இந்த திட்டத்தின் மூலம் 50 வயதை கடந்த ஆண்களிடமும் முழுமையான ஆதரவை இதன்மூலம் பெறலாம் என்று ஆலோசனை வழங்குகின்றனர்

பெண் பயணிகள் அனைத்து பேருந்துகளிலும் இலவசமாக சென்று, பேருந்தின் இருக்கைகளையும் அவர்களே ஆக்கிரமித்து உட்கார்ந்து கொள்வதால் பேருந்தில் பணம் கொடுத்து பயணம் செய்யும் ஆண் பயணிகளிடம் இது கடும் விமர்சனங்களை எழுப்பி வருகிறது. எனவே 50 வயதுக்கு மேற்பட்ட ஆண் பயணிகளுக்கும் இலவசமாக பேருந்தில் பயணம் செய்யும் வகையில் மாதாந்திர பாஸ் அல்லது ஒரு ஆண்டுக்கு பயணம் செய்யும் வகையில் இலவச வெற்றி பயணம் பாஸ் வழங்க வேண்டும் என்றும், பெண்களுக்கு பயணச்சீட்டு வழங்காமல் நடத்துநர்களின் பணியை குறைத்து பேருந்தில் சில ஆண்டுகளுக்கு முன்பு கட்டமைக்கப்பட்டது போல் முன்புறம் பெண்கள், பின்புறம் ஆண்கள் அமரும் வகையில் பேருந்துகளை மாற்ற வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்து வருகின்றனர். இதனால் தினசரி பேருந்துகளில் ஆண்கள், பெண்கள், நடத்துனர், ஓட்டுனர் ஆகியோரிடையே ஏற்பட்டுள்ள மனக்கசப்புகள் நீங்கும் என்றும், இந்த வெற்றிப் பயணம் உண்மையான வெற்றிப் பயணமாக அமையும் என்றும் ஆண் பயணிகள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

தமிழ்நாடு அரசு புதிதாக பேருந்துகள் வாங்கி இயக்கி போக்குவரத்தை முறைப்படுத்த பல்வேறு முயற்சிகளை செய்து வருகிறது. இந்த பேருந்துகள் குறித்து சிலரிடம் அதிருப்தி நிலவி வருகிறது. குறிப்பாக பேருந்தின் நிறம் தமிழக வெற்றிக் கழகம் கட்சியின் கொடியின் நிறத்தை பிரதிபலிப்பது போல் மஞ்சள் மற்றும் சிவப்பு நிறத்துடன் உள்ளது.

இதனால் இந்த பேருந்துகள் விஜய் பஸ் என்று அழைக்கப்பட்டு மாற்று கட்சிகளை சேர்ந்த நபர்களிடமும் அரசியல் சார்பு இல்லாத பொதுமக்களிடமும் விமர்சனங்களை பெற்று வருகிறது.

எனவே இந்த பேருந்துகளை அரசியல் கட்சிகள் சார்பு இல்லாமல் பொதுவான வகையில் மக்களின் மனங்களை கவரும் வகையில் வெள்ளையும் ரோஜா நிறமும் கலந்து இருக்கும் வகையிலும் பூக்கள் அமைந்து இருப்பது போல் இருந்தால் பொதுமக்கள் பாராட்டி வரவேற்பு அளிப்பார்கள் என்று அரசியல் சார்பு இல்லாத பலதரப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்



75வது அகில இந்திய காவல்துறை மல்யுத்தக் குழுமப் போட்டிகள் 2026 - 2027ல் 1 தங்கம், 3 வெள்ளி, 4 வெண்கலம் பதக்கம் வென்ற தமிழ்நாடு காவல்துறை வீரர்களை 30.09.2026, GP/HoPF, Dr மகேஷ் குமார் அகர்வால், IPS, அவர்கள் பாராட்டி கௌரவித்தார்.

திருட்டு நகையை திருடிய போலீசார்? தஞ்சாவூர் போலீஸார் மீது அதிரடி நடவடிக்கை: 4 பேர் ஆயுதப்படைக்கு மாற்றம்!

"20 பவுன் நகையை மீட்டும், 4 பவுன் மட்டுமே உரியவரிடம் ஒப்படைத்ததாக புகார் எஸ்.பி. சுந்தரவதனம் உத்தரவால் எஸ்.ஐ. குமரவேல் உள்ளிட்ட 4 போலீஸார் தஞ்சாவூர் ஆயுதப்படைக்கு பணியிட மாற்றம்!"

தஞ்சாவூர் அருகே ஒரத்தநாடு போலீஸ் சரகத்திற்கு உட்பட்ட பகுதிகளில் நடைபெறும் குற்றச் சம்பவங்களைக் கண்காணித்து, குற்றவாளிகளை விரைவாகக் கைது செய்வதற்காக, திருவோணம் போலீஸ் எஸ்.ஐ. குமரவேல் தலைமையில் ஏட்டு தர்மலிங்கம், போலீஸார் ஜெகன், சின்னத்துரை ஆகிய நான்கு பேர் கொண்ட தனிப்படையைத் தஞ்சாவூர் எஸ்.பி. சுந்தரவதனம் அமைத்திருந்தார். இந்தத் தனிப்படையே தற்போது மோசடி மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளில் சிக்கியுள்ளது.

பின்னணி: திருட்டு வழக்கும், தனிப்படையின் பங்கும்

ஒரத்தநாடு அருகே உள்ள மேலஉளூர் பகுதியில் சமீபத்தில் ஒரு வீட்டில் நகை கொள்ளை நடந்துள்ளது. இதில் 20 பவுன் நகை கொள்ளை போனதாகக் கூறப்படுகிறது. இந்த வழக்கை விசாரித்த குமரவேல் தலைமையிலான தனிப்படை, நகையைத் திருடிய நபரைக் கைது செய்ததுடன், அவரிடமிருந்து 20 பவுன் நகையைப் பறிமுதல் செய்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முக்கிய நிகழ்வுகள்: 20 பவுன் மீட்டும், 4 பவுன் மட்டுமே ஒப்படைப்பு

இந்நிலையில், தனிப்படை மீட்ட நகைகளை உரியவரிடம் முழுமையாக ஒப்படைக்காமல், 4 பவுன் மட்டுமே நீதிமன்றம் மூலம் ஒப்படைத்ததாகக் கூறப்படுகிறது. மேலும், இந்த வழக்கின் எஃப்.ஐ.ஆரில் 4 பவுன் மட்டுமே காணாமல் போனதாகப் பதியப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதுகுறித்து பாதிக்கப்பட்ட நபர், தஞ்சாவூர் எஸ்.பி. அலுவலகத்தில் புகார் அளித்தார். அந்தப் புகாரை விசாரித்த எஸ்.பி. சுந்தரவதனம், குமரவேல் தலைமையிலான தனிப்படையைக் கலைத்து உத்தரவிட்டார்.

மேலும், விசாரணையில், "பல்வேறு



வழக்குகளை குமரவேல் தலைமையிலான தனிப்படை முறையாக விசாரிக்காமல், குற்றவாளிகளுக்கு ஆதரவாகச் செயல்பட்டதாகவும்" தகவல்கள் வெளியாகியுள்ளன. இதையடுத்து, எஸ்.பி. சுந்தரவதனம், எஸ்.ஐ. குமரவேல், ஏட்டு தர்மலிங்கம், போலீஸார் ஜெகன், சின்னத்துரை ஆகிய நால்வரையும் தஞ்சாவூர் ஆயுதப்படை பிரிவுக்கு பணியிட மாற்றி நடவடிக்கை மேற்கொண்டார்.

கூடுதல் தகவல்கள்: தனிப்படை தரப்பு மறுப்பு

இதுகுறித்து விபரம் அறிந்த சிலரிடம் பேசியபோது, "ஒரத்தநாடு அருகே உள்ள மேலஉளூரில் உள்ள ஒரு வீட்டில் நகை கொள்ளையடிக்கப்பட்டது. மொத்தம் 20 பவுன் கொள்ளை போனதாகச் சொல்கிறார்கள். இதனை குமரவேல் தலைமையிலான தனிப்படை விசாரித்த நிலையில் நகையைத் திருடிய நபரைக் கைது செய்ததுடன், அவரிடமிருந்து 20 பவுன் நகையைப் பறிமுதல் செய்ததாகச் சொல்கிறார்கள். இந்த வழக்கின் எஃப்.ஐ.ஆரில் 4 பவுன் மட்டுமே காணாமல் போனதாகப் பதியப்பட்டுள்ளது

என்கிறார்கள். இந்நிலையில், குமரவேல் டீம், 4 பவுன் மட்டுமே நீதிமன்றத்தின் மூலம் உரியவரிடம் ஒப்படைத்ததாகச் சொல்கிறார்கள். இதைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட நபர் இதுகுறித்து எஸ்.பி. சுந்தரவதனத்திடம் புகார் அளித்துள்ளார். அதன் பிறகு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது" என்றனர்.

ஆனால், குமரவேல் தரப்பு, "இதில் நாங்கள் எந்தத் தவறும் செய்யவில்லை; தவறான தகவலைக் கிளப்பி விடுகிறார்கள்" என்று கூறி வருவது குறிப்பிடத்தக்கது.

கருப்பு எழுத்துக் கழக பகுப்பாய்வு

"வேலியே பயிரை மேய்ந்ததா?" என்ற கேள்வி, இந்தச் சம்பவத்தில் மிகவும் பொருத்தமானது. மக்களைக் காக்க வேண்டிய போலீஸார், தாங்களே குற்றவாளிகளுக்கு உதவினால், சாமானிய மக்கள் யாரை நம்புவார்கள்? 20 பவுன் நகையை மீட்டும், 4 பவுன் மட்டுமே ஒப்படைத்ததாகக் கூறப்படும் தகவல், காவல்துறையின் நம்பகத்தன்மையை மிக மோசமாகப் பாதிக்கிறது. மேலும், "எஃப்.ஐ.ஆரில் 4 பவுன் மட்டுமே காணாமல் போனதாகப் பதியப்பட்டது" என்பது, வழக்கை வேண்டுமென்றே சிறிதாக்கிக் காட்டும் ஒரு முயற்சியாகவே தெரிகிறது.

எஸ்.பி. சுந்தரவதனம், உடனடியாக நடவடிக்கை எடுத்து, தனிப்படையைக் கலைத்து, நால்வரையும் ஆயுதப்படைக்கு மாற்றியிருப்பது வரவேற்கத்தக்கது. ஆனால், இது ஒரு தொடக்கம் மட்டுமே. "குற்றவாளிகளுக்கு ஆதரவாகச் செயல்பட்டதாக"க் கூறப்படும் இந்த அதிகாரிகள் மீது துறை ரீதியான விசாரணை நடத்தப்பட்டு, குற்றம் நிரூபிக்கப்பட்டால், அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இல்லையென்றால், "வேலியே பயிரை மேய்வது" தொடரும்.

அடுத்து என்ன நடக்கும்?

துறை விசாரணை: ஆயுதப்படைக்கு மாற்றப்பட்ட நான்கு போலீஸார் மீது துறை ரீதியான விசாரணை நடத்தப்பட்டு, குற்றம் நிரூபிக்கப்பட்டால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படலாம்.

நகை ஒப்படைப்பு:

பாதிக்கப்பட்ட நபருக்கு மீதமுள்ள நகைகளை ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படலாம்.

கொலை குற்றவாளி குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் கைது

கோவை மாவட்டம், நீலாம்பூர் காவல் நிலைய பகுதியில் வாசிக்கும் விக்னேஷ் (32) என்பவரை கடந்த 25.08.2026 அன்று கொலை செய்த குற்றத்திற்காக ராஜலிங்கம் மகன் சங்கரேஸ்வரன் (27) என்பவர் மீது நீலாம்பூர் காவல் நிலைய ஆய்வாளர் கொலை வழக்குப்பதிவு செய்து சிறையில் அடைத்தார். பொது அமைதிக்கும் சட்ட ஒழுங்கிற்கும் பாதகமான செயலில் ஈடுபட்ட குற்றத்திற்காக சங்கரேஸ்வரன் என்பவர் மீது குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. பவன் K.ரெட்டி, இ.கா.ப., அவர்கள் பரிந்துரை செய்தார். அப்பரிந்துரையின் பேரில் கோவை மாவட்ட ஆட்சியர் திரு.பவன்குமார் க.கிரியப்பனவர், இ.ஆ.ப., அவர்கள் மேற்கண்ட நபர் மீது குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க உத்தரவு பிறப்பித்தார். அவ்வுத்தரவின் அடிப்படையில் கொலை வழக்கு குற்றவாளி யான சங்கரேஸ் வரன் என்பவரை குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் சிறையில் அடைத் தனர்.



மேலும் பொது அமைதிக்கு குந்தகம் விளைவித்தாலோ, பொது சுகாதார பராமரிப்பிற்கு பாதகமாக செயல்பட்டாலோ அவர்கள் மீது குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் எச்சரித்துள்ளார்.

பொதுமக்கள் தங்களது பகுதிகளில் இதுபோன்ற குற்ற செயலில் ஈடுபடும் நபர்கள் குறித்து காவல் துறைக்கு தகவல் தெரிவிக்க 9498181212 மற்றும் வாட்ஸ் அப் எண் 7708100100 என்ற எண்ணிலும் தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கலாம் என்று பொதுமக்களுக்கு தெரிவித்துள்ளார்.









கலை பண்பாட்டு துறை உதவி இயக்குனர் பாரம்பரிய கலைகளை ஊக்குவிப்போம்!

கட்டுரை ம.ராஜாராமன் பேட்டி

நாட்டில் உள்ள கலைகளில் தப்பாட்டம், கரகாட்டம், பறையிசையெல்லாம் தொன்றுதொட்டு வரும் கலைகள். திருவிழாக்கள், சுப, துக்க நிகழ்வுகள் போன்றவைகளில் கலைஞர்கள் இன்றும் நிகழ்ச்சிகளை நடத்திக்கொண்டிருப்பார்கள். தற்போது கேரளத்தின் செண்டை மேளம், வட இந்திய பேன்ட் வாத்தியம், திரைத்துறையின் ஆடல், பாடல், இன்னிசைக் கச்சேரி போன்றவற்றை கிராம மக்கள் விரும்புகின்றனர்.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்பவர்களை வரவழைத்து, கிராமங்களில் நிகழ்வுகளை நடத்து கின்றனர். இதனால் இளம்தலை முறையினர் பாரம்பரியக் கலை களை அறிவதற்கான வாய்ப்புகள் குறைகிறது. ஆகவே, பாரம்பரியக் கலைகளையும், கலைஞர்களையும் ஊக்குவிக்க வேண்டும்" என்கிறார் தஞ்சாவூர் மண்டல கலை, பண்பாட்டுத் துறையின் உதவி இயக்குநராக இருக்கும் ம.இராஜா ராமன்.



ம.இராஜாராமன்

அரசின் பல்வேறு பணிகளிலும், தளங்களிலும் பணியாற்றிய இவர் சீட்' அறக்கட்டளையின் பயிற்சி மைய முன்னாள் இயக்குநர், இந்திய பொது நிர்வாகக் கழகச் செயற்குழு உறுப்பினர், இந்திய அதிகாரிகள் சங்கத்தின் வாழ்நாள் உறுப்பினர் என்று பல பதவிகளையும் வகித்தவர். அவருடன் பேசியபோது:

சிறுவயது முதலே நூலகத்தில் அதிக நேரத்தைச் செலவிடுவேன். தமிழ் மொழியை சரியாக, அழகாக, நேர்த்தியாக உச்சரிப்பது அந்த மொழிக்கே அழகு. ஆகவே, சென்னையில் போட்டித் தேர்வுக்குத் தயாராகிறபொழுது, தூர்தர்ஷனில் தமிழ் செய்தி வாசிப்பாளர் பணிக்கு ஆள்களைத் தேர்வு செய்வதாக விளம்பரத்தைப் பார்த்து விண்ணப்பித்தேன்.

5 ஆயிரம்பேர் கலந்துகொண்ட தேர்வில் ஒவ்வொரு படியாக உச்சரிப்பு, மொழி என 7 வகையான தேர்வுக்குப் பின்னர் நான் உள்பட 5 பேர் தேர்வானோம். நேரலையில் செய்திகளை வாசிக்கின்ற பொழுது, எந்தத் தவறுக்கும் இடம் அளிக் காமல் நேர்த்தியாக வாசித்தாக வேண்டியது கட்டாயம். செய்தி வாசிப்பது எனக்குள் பல்வேறு மாற்றத்தையும், தாக்கத்தையும் ஏற்படுத்தியது.

ஆசிரியர் பயிற்சி முடித்து, 2005 ஆகஸ்ட் 1இல் ஆசிரியர் பணி தொடங்கியது. அதிலிருந்து, பின்னர், ஐ.ஏ.எஸ். தேர்வுக்கான தயாரிப்பு, தூர்தர்ஷனில் செய்தி வாசிப்பாளர் பணி, பேரிடர் மீட்புப் பணி, வருவாய் ஆய்வாளர், தலைமைச் செயலகத்தில் செய்தி மக்கள் தொடர்பு, அறநிலையங்கள் மற்றும் தமிழ் வளர்ச்சித் துறையில் உதவி பிரிவு அலுவலர் எனப் பல்வேறு

பொறுப்புகளில் இருந்துவிட்டு கடந்த ஓராண்டுக் காலமாக தஞ்சாவூர் மண்டலத்தின் மண்டல உதவி இயக்குநராகப் பயணித்துக் கொண்டிருக்கிறேன்.

எந்தப் பணியாக இருந்தாலும், யாருக்கெல்லாம் உதவி தேவையோ அவர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு உதவுகின்ற ஒரு வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. கலைப்பண்பாட்டுத் துறைக்கு வந்தவுடன் 7 மாவட்டக் கலைஞர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான பல்வேறு நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறேன்.

இளங்கலை, முதுகலை பொது நிர்வாகம் படிப்பை தொலைநிலைக் கல்வி முறையில் பயின்றே 2011ஆம் ஆண்டில் நெட் தேர்விலும், ஜெ.ஆர்.எஸ்.தேர்விலும் தேர்ச்சி பெற்றேன்.

எந்தப் பணியாக இருந்தாலும், யாருக்கெல்லாம் உதவி தேவையோ அவர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு உதவுகின்ற ஒரு வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. கலைப்பண்பாட்டுத் துறைக்கு வந்தவுடன் 7 மாவட்டக் கலைஞர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான பல்வேறு நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறேன்.

இளங்கலை, முதுகலை பொது நிர்வாகம் படிப்பை தொலைநிலைக் கல்வி முறையில் பயின்றே 2011ஆம் ஆண்டில் நெட் தேர்விலும், ஜெ.ஆர்.எஸ்.தேர்விலும் தேர்ச்சி பெற்றேன்.

20 ஆண்டு ஆசிரியர் பணிக்காலத்தில் நான் மிகவும் ஆழமாகவும், நேர்மறைச் சிந்தனையுடனும் ஒரு சிறப்பான, திருப்தியான வாழ்வு வாழ்ந்தேன்.

அரசர்கள் வேடத்தில் நான் பாடம் நடத்திய போது, மாணவர்களின் மனதில் பதிந்து அழகாக நடித்துக் காட்டினார்கள். மாணவர்களுக்கு எந்த வகையில் கற்பித்தால், எளிதாகப் புரியுமோ அந்த விதத்தில் கற்பிக்கும் கடமை ஆசிரியர்க ளுக்கு உள்ளது. செயல்வழிக் கற்றல் முறையை தீவிரமாக அமல்படுத்தி அனைவரையும் தேர்ச்சிபெறச் செய்தேன். கதை சொல்லுதல், பண்பாட்டு விழுமியங்களான விருந்தோம்பல், பாரம்பரிய உடைகளை மாணவர்களை அணிந்துவரச் செய்தல் என மொழி, பண்பாட்டின் மீதான ஆர்வத்தையும் தொடர்ந்து உருவாக்கினேன்.

பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய மொழியான தமிழ், இன்றும் உயிர்ப்புடன் இருந்து வருகிறது. பெரும்பாலான பள்ளிகளில் தமிழ்ப் பாடம் தவிர மற்ற பாடங்களை ஆங்கிலத்தில்தான் கற்றுத்தருகிறார்கள். இதனால் தமிழ் மொழியின் மீதான ஆர்வமும், ஈர்ப்பும் அவர்களுக்கு வெகுவாகக் குறைந்து விடுகிறது.

ஆகவே தமிழ் இலக்கியத்துக்காக வகுப்புகள் நடத்தவேண்டும். நூலகத்தில் மாணவர்களை அமரச்செய்து, படிக்கவைத்து, அதன்மூலம் போட்டிகள் நடத்தி அவர்களுக்குப் பரிசுகள் வழங்கவேண்டும். ஒரு மொழி நம்மை ஆட்கொள்கிறபோது, அதில் மூழ்கி முத்தெடுப்போம். ஆகவே, நூலகத்தில் தரமான படைப்புகளை வாசிக்க மாணவர்களை ஊக்குவிக்க வேண்டும்" என்றார்.

கஞ்சா மற்றும் சட்டவிரோத ஆயுதங்களுடன் சுற்றித்திரிந்த குற்றவாளிகளை கைது செய்த காவலர்களுக்கு பாராட்டு



தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை உட்கோட்டத்திற்கு உட்பட்ட பகுதியில் தடை செய்யப்பட்ட கஞ்சா மற்றும் சட்டவிரோத ஆயுதங்களை வைத்துக்கொண்டு வழிப்பறியில் ஈடுபட்ட குற்றவாளிகளை விரைந்து கைது செய்து, சிறப்பாகவும் துரிதமாகவும் பணியாற்றிய தஞ்சாவூர் தனிப்படை உதவி ஆய்வாளர் திரு. அருள்குமார் மற்றும் காவலர்கள் அடங்கிய குழுவினரின் சிறப்பான பணியைப் பாராட்டி, தஞ்சாவூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. ஏ. சுந்தரவதனம், இ.கா.ப., அவர்கள் வெகுமதி வழங்கி பாராட்டினார்.

சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை ஆய்வுக் கூட்டம்





திருநெல்வேலி சரக காவல் அலுவலக கருத்தரங்குக் கூடத்தில், திருநெல்வேலி சரக காவல்துறை துணைத் தலைவர் முனைவர் இரா. திருநாவுக்கரசு, IPS., அவர்கள் தலைமையில் சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப் படையில் பணிபுரியும் உதவி ஆய்வாளர்கள் மற்றும் பெண் காவல் ஆளினர்களுக்கான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் பணிபுரியும் சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை காவல் அதிகாரிகள் மற்றும் ஆளினர்களின் செயல்பாடுகள், களப்பணியில் எதிர்கொள்ளும் நடைமுறை சிரமங்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் பணித்திறன் மேம்பாடு குறித்து ஆய்வு செய்து, தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநர் Dr.மகேஷ் குமார் அகர்வால் ஆவடி காவல் ஆணையரக அலுவலகத்தில் ஆய்வு

தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநர், படைத்தலைவர் Dr.மகேஷ் குமார் அகர்வால் IPS., அவர்கள் 03.10.2026 அன்று ஆவடி காவல் ஆணையரக அலுவலகத்தில் சட்டம்ஒழுங்கு குறித்து ஆய்வு செய்தார்.

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள், POCSO வழக்குகள், சாலை விபத்துகள், இணையவழி குற்றங்கள் மற்றும் கஞ்சா, குட்கா போன்ற போதைப்பொருட்களின் நடமாட்டத்தை குறைப்பது தொடர்பான நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்து அறிவுரைகள் வழங்கினார்.

காவல் ஆளிநர்களின் குறைகளை கேட்டறிந்து, சிறப்பாக பணியாற்றிய 20 காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் வெகுமதிகள் வழங்கினார்.



நர்சிங் கல்லூரி மாணவி கூட்டுபாலியல் செய்து கொலை?

நீதி கேட்டு அலையும் தந்தை ஹாயாக சுற்றும் கொலையாளிகள்

முதல்வர் விஜய் அரசு நீதி வழங்குமா?



புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரியில் மூன்றாம் ஆண்டு படித்து வந்த (ரத்த பரிசோதனை நர்சிங்) மாணவி சௌமியா கூட்டு பாலியல் வன்கொடுமையால் கொலை செய்யப்பட்டார் என குடும்பத்தார் குற்றச்சாட்டுக்கு இதுவரை காவல் துறையில் இருந்து முறையான விசாரணையும் சரியான பதிலும் அந்த சாவுக்கு நீதியும் கிடைக்கவில்லை என மாணவியின் பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

என்ன நடந்தது என்று நமது கட்டுரையில் பார்ப்போம். புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி தாலுகா கருக்கங்குறிச்சியை சேர்ந்தவர் ரமேஷ், இவருடைய மனைவி முத்துலட்சுமி. இவர்களின் மூத்த மகள் சௌமியா. இவர் புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரியில் பாரா மெடிக்கல் படிப்பில் மூன்றாம் ஆண்டு படித்து வந்தார். இவர் அங்கு வசிப்பவர்களில் சிறிய அளவில் வசிக்கும் சமூகத்தைச் சார்ந்தவர். இந்த ஊரில் இவர் சார்ந்த சமூகத்தை சேர்ந்தவர்கள் சுமார் எட்டு குடும்பங்கள் மட்டுமே வசிக்கிறார்கள். இவர்கள் அனைவருக்கும் விவசாய நிலங்கள் உள்ளது. விவசாயமே இவர்களின் முக்கிய தொழிலாக உள்ளது. அனைவரும் விவசாயத் தொழில் செய்து வருகிறார்கள். கடந்த 25:12:2024 ஆம் தேதி அன்று சௌமியாவின் பெற்றோர் சூரக்காடு கிராமத்திற்கு உறவினர் ஒருவர் துக்க நிகழ்ச்சிக்கு சென்றுவிட்டு திரும்ப வீட்டிற்கு வந்தனர். அன்று இரவு சுமார் ஏழு மணி அளவில் வீட்டின் முகப்பு வராண்டாவில் அமர்ந்து சாப்பாடு சாப்பிட்டு கொண்டிருந்த சௌமியா காணவில்லை யாரோ கடத்தி விட்டார்கள் என கூறப்படுகிறது.

வீட்டுக்கு வந்த சௌமியாவின் பெற்றோர்கள் சௌமியா வீட்டில் இல்லாததை கண்டு அதிர்ச்சி அடைந்தனர். அவர் சாப்பிட்டு வந்த தட்டு சிதறி ஆங்காங்கே சாப்பாடு கிடந்துள்ளது.

அவர் வீட்டில் பயன்படுத்தும் செருப்பு மற்றும் அவரது செல்போன் ஆகியவை வீட்டிலேயே இருந்தது. இதனால் அதிர்ச்சி அடைந்த அவரின் பெற்றோர் உடனடியாக சௌமியாவின் செல்போனை எடுத்து பார்த்துள்ளனர். அதில் மணிகண்டன் என்பவர் வாட்ஸ்அப் மூலம் கடைசியாக பேசி இருந்தது தெரியவந்தது. இதனால் அதிர்ச்சி அடைந்த அவர்கள் இரவு முழுவதும் தன் மகளை தேடினார்கள். பின்னர் அதே பகுதியில் உள்ள நீர்நிலைகள், குளம், கிணறு ஆகிய இடங்களிலும் தேடிப் பார்த்தும்

எங்கும் தன்மகள் இல்லாததால் அதிர்ச்சி அடைந்தனர்.

பின்னர் இது சம்பந்தமாக தன் மகள் காணவில்லை என வடக்காடு காவல் நிலையத்தில் புகார் மனு கொடுப்பதற்காக தந்தை ரமேஷ் சென்றிருக்கிறார். அந்த நேரம் காவல் நிலையத்தின் ஆய்வாளர் தனபால் காவல் நிலையத்தில் இல்லை. மறுநாளும் புகார் அளிக்க சென்ற பொழுதும் ஆய்வாளர் இல்லாததால், அதே பகுதியில் காவல் ஆய்வாளர் தங்கி இருந்த வீட்டிற்கு சென்று ரமேஷ் ஆய்வாளரை சந்தித்து புகார் மனுவை கொடுத்துள்ளார். மேலும் என் மகள் காணவில்லை, விரைந்து கண்டுபிடித்து தரும்படி கூறி புகார் கடிதம் கொடுத்துவிட்டு, அதே பகுதியை சேர்ந்த மற்றொரு சமூகத்தைச் சேர்ந்த மணிகண்டன் என்ற நபர் மீது தங்களுக்கு சந்தேகம் உள்ளதாகவும் சௌமியாவின் அப்பா உறுதியாக தனது புகாரை கொடுக்கும் போது ஆய்வாளரிடம் கூறியுள்ளார்.



இந்த புகார் குறித்து சௌமியாவின் தந்தை ரமேஷ் கூறுகையில், என் மகள் இறந்து இரண்டு நாட்களாக நாங்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து விட்டும் பல இடங்களில் தேடிப் பார்த்து விட்டோம் கிடைக்கவில்லை. மணிகண்டன் மீது எங்களுக்கு சந்தேகம் உள்ளதாக ஆய்வாளரிடம் உறுதியாக தெரிவித்து விட்டு வந்தும் அவர் எந்த நடவடிக்கை எடுத்ததாக தெரியவில்லை.

பின்னர் 26 ஆம் தேதி மாலை என்னை விசாரிக்க வேண்டும், உடனே காவல் நிலையம் வாருங்கள் என ஆய்வாளர் அழைத்தார். அதை தொடர்ந்து நான் காவல் நிலையம் சென்றேன். அப்போது அங்கு மணிகண்டன் காவல் ஆய்வாளர் முன்பு சேரில் அமர்ந்திருந்தார். நான் ஆய்வாளிடம் சென்று என் மகளை கண்டுபிடித்து விட்டீர்களா? என்று கேட்ட பொழுது ஆய்வாளரும் மணிகண்டனும் ஒருமித்த குரலில் ஒரு இடத்தை குறிப்பிட்டு அந்த கிணற்றில் போய் பார், உன் மகள் இருப்பாள், நல்லா தேடிப்பார் என்று சொல்லி என்னை துரத்தி விட்டனர்.

பின்னர் நான் அந்த கிணற்றில் வந்து பார்த்த போது எனது மகள் சடலமாக அந்த கிணற்றில் இறந்து கிடந்தார். என் மகள் காணாமல் போன அன்றும், மறுநாளும் நாங்கள் இந்த கிணற்றில் தேடிப் பார்த்தோம். அப்பொழுது அந்த கிணற்றில் எந்த உடலும் இல்லை. ஆனால் இரண்டு தினங்கள் கழித்து ஆய்வாளர் தனபால் அந்த கிணற்றுக்குள் பார் என்று சொல்லி நாங்கள் போய் பார்த்தபொழுது என் மகள் உடல் அங்கு கிடந்தது.

பின்னர் தீயணைப்பு துறை உதவியுடன் என் மகள் உடலை வெளியே எடுத்தனர். அப்போது அங்கிருந்த ஒருவர் எடுத்த புகைப்படத்தை நாங்கள் பார்த்தபோது அவர் உடலில் கூடு வைத்த காயங்கள் இருந்தன. மேலும் என் மகளை பலர் கூட்டு பாலியல் செய்து, கொலை செய்யப்பட்டு இந்த கிணற்றில் வீசப்பட்டு இருக்கலாம் என்பதை நான் உட்பட எங்கள் உறவினர்கள் அனைவரும் உறுதியாக நம்பினோம். அதை காவல் துறையினரிடம் தெரிவித்தும் அவர்கள் அப்போது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதை தொடர்ந்து பிரத பரிசோதனை நடக்கும் நேரத்தில் நாங்கள் தஞ்சாவூர் நெடுஞ் சாலையில் இந்த கொலைக்கு நியாயம் வேண்டும் எனக் கூறி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டோம். நாங்கள் எத்தனை போராட்டம் நடத்தினாலும் என் மகளின் சாவுக்கு நீதி கிடைக்கவில்லை.

இதில் அந்த பகுதியைச் சேர்ந்த முன்னாள் ஆளுங்கட்சியை சேர்ந்த சிலருக்கு இந்த கொலையில் தொடர்பு இருப்பது குறித்து நாங்கள் காவல்துறையிடம் சொன்னோம். அந்த நேரத்தில் திமுகவை சேர்ந்த முன்னாள் சட்டத்துறை அமைச்சரின் நெருங்கிய உறவினர்களான

அவர்களை போலீசார் கிட்ட கூட நெருங்க வில்லை.

பின்னர் போஸ்ட்மார்ட்டம் முடிந்து உடலை எங்களுக்கு கொடுத்தனர். அப்பொழுது எங்கள் பகுதியை சேர்ந்த திமுக கட்சியின் முக்கிய நிர்வாகி ஒருவர் உடலை பெற்றுக் கொண்டு, உடனே தகனம் செய்து விடுங்கள் என்று எங்களுக்கு ஆலோசனை கூறிக் கொண்டே இருந்தார். அவரின் அவசரமும் அவரின் செயல்பாடுகளும் எங்களுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியது. காரணம் அவர் முன்னாள் சட்டத்துறை அமைச்சருக்கு நெருங்கிய உறவினர் ஆவார். மேலும் எங்கள் மகளின் உடலை பார்ப்பதற்குகூட எங்களுக்கு போலீசார் அனுமதி கொடுக்கவே இல்லை. அதை மறைப்பதிலேயே ஆர்வம் காட்டினர். மேலும் என் மகள் தற்கொலை செய்து கொண்டதாக அவர்கள் தொடர்ந்து தெரிவித்தனர். ஆனால் என் மகள் தற்கொலை செய்து கொள்ளும் அளவிற்கு அவர் கோழை கிடையாது அது போல் தற்கொலை செய்வதற்கு உரிய காரணமும் எதுவும் இல்லை. அவள் ரொம்பவும் தைரியமான பெண். எதையும் போல்டாக நேருக்கு நேர் எதிர்த்து நிற்கக் கூடிய அளவுக்கு தைரியம் உள்ளவள். ஆகவே அவள் தற்கொலை செய்வதற்கு ஒரு சதவீதம் கூட காரணம் இருக்க வாய்ப்பில்லை. அதனால் என் மகளை நாங்கள் குற்றம் சாட்டிய மணிகண்டன் மற்றும் சிலர் சேர்ந்து கூட்டு பாலியல் வன்கொடுமை செய்து அந்த கிணற்றில் கொன்று வீசி உள்ளனர் என்பதே எங்களின் குற்றச்சாட்டு. அதை முழுமையாக விசாரித்தால் என் மகளின் இந்த கொலை வழக்கில் நியாயமும் நீதியும் எங்களுக்கு கிடைக்கும். நாங்களும் கடந்த இரண்டு ஆண்டுகளாக இதற்காக கடுமையாக பல சட்ட போராட்டங்களையும் பல புகார்களும் தொடர்ந்து கொடுத்து வந்தோம். எங்களுக்கு எந்த நியாயமும் கிடைக்கவில்லை. மேலும் மதுரை ஐகோர்ட்டு மூலம் மீண்டும் ஒருமுறை பிரத பரிசோதனை செய்ய கேட்டு, அதுவும் செய்து முடித்தோம். ஆனால் அதற்கான பிரேத பரிசோதனை அறிக்கை இதுவரை எங்களுக்கு வழங்கவில்லை. என்ன காரணம் என்று எங்களுக்கு தெரியவில்லை. இது முன்னாள் திமுக ஆட்சியில் நடந்த கொலை. அந்த கட்சிக்கு வேண்டப்பட்டவர்கள் இந்த கொலை வழக்கில் சம்பந்தப்பட்டு உள்ளதால், இந்தசம்பவம் மறைக்கப் பட்டது என்பதை நாங்கள் மறுக்கவில்லை.

தற்போது பெண்களுக்கு பாதுகாப்பு தருவேன் என சொல்லும் புதிய முதல்வர் ஜோசப் விஜய் ஆட்சி நடந்து வருகிறது. அதனால் என் மகளின் சாவிற்கு கண்டிப்பாக நீதி கிடைக்கும் என நாங்களும் எங்கள் குடும்பத்தாரும் நம்பிக்கை யுடன் நம்பி மீண்டும் இந்த சம்பவத்தை அரசுக்கு தெரியப்படுத்த தற்போது புகார்கள் கொடுத்து வருகிறோம். என் மகள் உயிரிழந்து விட்டார். அவரை துடிக்க துடிக்க கொன்ற இந்த கயவர்கள் இங்கு ஹாயாக சுற்றி வருகிறார்கள். அவர்க ளுக்கு கடுமையான தண்டனை வாங்கித் தர வேண்டும் என்பதே என்னுடைய சட்ட போராட்ட மாகும். அவர்கள் தண்டிக்கப்படும்போதுதான் எனது மகளின் ஆன்மா சாந்தி அடையும். இது இந்த முதல்வர் விஜய் ஆட்சியில் நடக்குமா என்பதை நாங்கள் எதிர்பார்த்து காத்துக் கொண்டிருக்கிறோம். மீண்டும் இந்த வழக்கை ஒரு நல்ல அதிகாரி, நேர்மையான அதிகாரி விசாரித்தால் என் மகளின் இந்த அநியாய சாவுக்கு நியாயம் கிடைக்கும் என்பது 200 சதவீதம் நம்பிக்கை உள்ளது என்று கண்ணீர் மல்க அவர் தெரிவித்தார்.

அதே நேரத்தில் சௌமியாவின் சாவிற்கு நீதி கேட்டு அவர் குடும்பத்தார் சட்டப் போராட்டங்கள் நடத்தி வரும் வேளையில் அவர் சாவில் பல்வேறு சந்தேகங்களுக்கு உண்டான கேள்விகளும் எழுந்துள்ளது. ஆனால் போலீசார் சரியாக இந்த வழக்கை கையாளவில்லை, விலை போய் விட்டார்கள் என்று அப்பகுதியை சேர்ந்த பலர் தெரிவிக்கின்றனர். எது எப்படி இருந்தாலும் ஒரு உயிர் எடுக்கப்பட்டுள்ளது. உயிருக்கு விலை இல்லை, அதுவும் ஒரு மருத்துவத் துறை சேர்ந்த ஒரு இளம் பெண் மானவியின் மரணம் ஒட்டுமொத்தமாக அந்த கிராமத்தையே அதிர்ச்சிக்கு உள்ளாக்கி இருக்கிறது என்பது மாற்றுக் கருத்து இல்லை. அதே நேரத்தில் 100 குற்றவாளிகள் தப்பித்து விடலாம் ஒரு நிரபராதி கூட தண்டிக்கப் படக்கூடாது என்பது எல்லோரும் சொல்லும் கருத்து. ஆனால் ஒரு குற்றவாளி கூட தப்பிக்க கூடாது, குற்றம் செய்துவிட்டு ஹாயாக வெளியில் நடமாட கூடாது என்பது எங்களின் தாழ்மையான கருத்தாகும். மகளின் சாவுக்கு நீதி கேட்டு நிற்கும் அந்த தந்தையின் போராட்டத்திற்கு நீதி கிடைக்குமா? பொறுத்திருந்து பார்ப்போம்.....!

தொடரும்

300 கேமராக்கள்... 5 மாவட்டங்கள்.. 100'க்கும் மேற்பட்ட வழக்குகள் உள்ள கொடூரக் கொள்ளையர்கள் கைது...



தென்காசி மாவட்டம் சுரண்டை பகுதியில் பூட்டிய வீட்டுத் திருட்டு வழக்கில் மர்ம முடிச்சை அவிழ்த்து, 25 பவுன் நகையை மீட்ட தென்காசி காவல்துறையின் விவேகமும் வீரமும்....

தென்காசி மாவட்டத்தில் கடந்த ஆகஸ்ட் 22ஆம் தேதி தென்காசி மாவட்டம் சுரண்டை காவல் எல்லைக்குட்பட்ட மரியாதாயபுரத்தைச் சேர்ந்த அந்தோணி முத்து என்பவரது வீட்டில் நிகழ்ந்த சம்பவம் அப்பகுதியையே உலுக்கியது. வீட்டின் பூட்டை உடைத்து உள்ளே புகுந்த மர்ம நபர்கள் வாழ்நாள் முழுவதும் சிறுகச் சிறுகச் சேர்த்த பவுன் நகைகளையும், பணத்தை அள்ளிக்கொண்டு மின்னல் வேகத்தில் மறைந்தனர்.

பாதிக்கப்பட்ட குடும்பத்தின் கண்ணீரும், அக்கம் பக்கத்தினரின் அச்சமும் ஒன்றுகூட, சுரண்டை காவல் நிலையத்தில் புகார் பதிவு செய்யப்பட்டது. திருடப்பட்ட பொருட்களை மீட்டாக வேண்டும், குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை பெற்றுத் தந்தாக வேண்டும் என்ற இக்கட்டான பொறுப்பு காவல்துறையின் தோள்களில் ஏறியது.

வழக்கின் தீவிரத்தை உணர்ந்த தென்காசி மாவட்ட காவல் கண் காணிப் பாளர் திரு. அசோக்குமார் அவர்கள் களத்தில் நேரடியாக இறங்கினார்.



தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அசோக்குமார்

ஆலங்குளம் காவல் துணைக் கண்காணிப்பாளர் திரு. கிளாட்சன் ஜோஸ் அவர்களின் வழிகாட்டுதலில், சுரண்டை காவல் ஆய்வாளர் திரு. மதன் ராம்குமார் மற்றும் உதவி ஆய்வாளர் திரு. ராஜா ஆகியோர் தலைமையில் சளைக்காத, திறமையான காவலர்களைக் கொண்ட சிறப்புத் தனிப்படை அமைக்கப்பட்டது.

அதிகாரிகளின் உத்தரவு வந்ததும், தனிப்படைச் சிங்கங்கள் களமிறங்கின. ஆனால், குற்றவாளிகளோ எந்தவொரு நேரடித் தடயத்தையும் விட்டுச் செல்லாமல் மிகவும் சாதுர்யமாகத் தப்பியிருந்தனர்.

இங்கிருந்து தொடங்கியது காவல்துறையின் உண்மையான சவாலும், வேட்டையும் 300 கேமராக்கள்... 5 மாவட்டங்களைக் கடந்த சல்லடைத் தேடுதல்:

கடினமான சூழ்நிலையிலும் காவல்துறையினர் தங்களது மன உறுதியை இழக்கவில்லை. சுட்டெரிக்கும் வெயில், இடைவிடாத மழை, தூக்கமில்லா இரவுகள் என அனைத்தையும்

மறந்து, குற்றவாளி தப்பிய பாதைகளைக் கணிக்கத் தொடங்கினர். சுரண்டையில் தொடங்கி, சுற்றியுள்ள கிராமங்கள், நெடுஞ்சாலைகள், சுங்கச் சாவடிகள் என இடைவிடாது தேடுதல் வேட்டை தொடர்ந்தது.



சுரண்டை காவல் ஆய்வாளர் மதன் ராம்குமார்

ஒருபுறம் உடல் சோர்வு அழுத்தினாலும், "பாதிக்கப்பட்டக் குடும்பத்திற்கு நீதி கிடைக்க வேண்டும்" என்ற ஒரே நோக்கம் அவர்களை இயக்கியது. தென்காசி, திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர் வழியாக திண்டுக்கல் வரை 5 மாவட்டங்களை எல்லைகளாகக் கடந்து, சுமார் 300க்கும் மேற்பட்ட சிசிடிவி (சிசிஜிக்ஷி) கேமரா பதிவுகளை இரவு பகலாகத் துல்லியமாக சல்லடை போட்டு ஆய்ந்தனர்.

நாட்கணக்கில் தூக்கமின்றி, கண்கள் சிவக்க, கணிப்பொறி திரைகளையும் கேமரா பதிவுகளையும் ஆராய்ந்த அவர்களின் அசாத்திய உழைப்பிற்கு இறுதியில் பலன் கிடைத்தது. சந்தேகத்திற்குரிய இருவரின் உருவங்கள் கேமராவில் சிக்கின.

தனிப்படையினரின் நுட்பமான விசாரணையில், இக்கடூரக் கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்ட நபர்களின் விவரங்களைக் கண்டு காவல் துறையினரே வியந்தனர். இவர்களில் வி.கே.புதூரைச் சேர்ந்த மனோஜ் (39) மீது ஏற்கனவே 30க்கும் மேற்பட்ட திருட்டு வழக்குகள் நிலுவையில் உள்ளன. மேலும், இதற்கெல்லாம் மேலாகத் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் காவல்துறைக்கு பெரும் சவாலாக விளங்கிய திண்டுக்கல்லைச் சேர்ந்த ராஜசேகர் (33) என்பவன் மீது 100க்கும் மேற்பட்ட குற்ற வழக்குகள் இருப்பது தெரியவந்தது!

நாடறிந்த குற்றவாளிகளான இவர்கள் இருவரும் இணைந்து மிகத் துல்லியமாகத் திட்டமிட்டு இந்தத் திருட்டை நடத்தியுள்ளனர். முதற்கட்ட அதிரடி நடவடிக்கையாக, மனோஜ் மற்றும் அவருக்கு உடந்தையாகச் செயல்பட்ட அவரது மனைவி உச்சினிமாகாளி ஆகியோரை தனிப்படையினர் மடக்கிப் பிடித்தனர். அவர்களிடம் நடத்தப்பட்ட தீவிர விசாரணையில் ரூ. 3.90 லட்சம் ரொக்கப் பணம் பறிமுதல் செய்யப்பட்டு, இருவரும் நீதிமன்றக் காவலில் சிறையில் அடைக்கப்பட்டனர்.

100 வழக்குகளில் தொடர்புடைய கொள்ளையனுக்குத் தொடர்ந்த வலை:

ஆனால், 100க்கும் மேற்பட்ட வழக்குகளில் தொடர்புடைய குற்றவாளியான ராஜசேகர், ஐந்து மாவட்ட எல்லைகளையும் தாண்டித் தப்பித்து ஓடி, தலைமறைவாக இருந்து வந்தான். காவல் துறையின் கரங்களில் இருந்து தப்ப முடியாது என்பதை உணராத அவனைக் பிடிக்க, தனிப்படையினர் தங்களது உளவு அமைப்பை மேலும் வலுப்படுத்தினர்.

இறுதியில், ராஜசேகர் ஒளிந்திருந்த இடத்தை மிகத் துல்லியமாகச் சுற்றி வளைத்த தனிப்படையினர், அவனை அதிரடியாகக் கைது செய்தனர். அவனிடமிருந்து சுமார் 25 பவுன் எடையுள்ள தங்கக் கட்டிகள் மற்றும் 4 செல்போன்களை பறிமுதல் செய்தனர். பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட ராஜசேகர், மீண்டும் சிறைச்சாலையின் இரும்புக் கம்பிக்குப் பின்னால் தள்ளப் பட்டான்.



சுரண்டை உதவி காவல் ஆய்வாளர் வி.ராஜா


பெருமிதத்தில் தென்காசி காவல்துறை:

100 வழக்குகளுக்கு மேல் உள்ள பழைய குற்றவாளியை, 300 கேமராக்களைச் சல்லடை போட்டு அலசி, 5 மாவட்டங்களைத் தாண்டிச் சென்று, 25 பவுன் தங்கத்தை மீட்டெடுத்த தனிப்படையினரின் இந்தச் சாதனை, தமிழ்நாட்டுக் காவல்துறையின் திறமைக்கும் அர்ப்பணிப்பிற்கும் ஒரு தகுந்த சான்றாகும்.

கடின உழைப்பாலும், நவீன புலனாய்வு உத்திகளாலும் குற்றவாளியைக் கைது செய்து, திருடப்பட்ட சொத்துக்களை முழுமையாக மீட்டெடுத்த தனிப்படை அதிகாரிகளையும் காவலர்களையும் தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. அசோக்குமார் அவர்கள் நேரில் அழைத்து வெகுவாகப் பாராட்டி, தனது வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

பொதுமக்களின் நிம்மதியான உறக்கத்திற்காக, தங்களின் உறக்கத்தைத் தியாகம் செய்து களத்தில் நிற்கும் ஒவ்வொரு காவலரின் உழைப்பும், இந்த வெற்றியின் மூலம் மீண்டும் ஒருமுறை பெருமையோடு நிலைநாட்டப்பட்டுள்ளது!

பொதுமக்கள் தெரிந்துகொள்ள வேண்டிய RTI தீர்ப்பு!



அதிரடி ஆணை பிறப்பித்த தமிழ்நாடு தகவல் ஆணையம்

தமிழ்நாடு தகவல் ஆணையம் தொடர்பான வழக்கு ஒன்றில், தகவல் அறியும் உரிமைச் சட்டம் தெரியாத பொது தகவல் அலுவலர்களுக்குக் கட்டாயப் பயிற்சி! அளிக்க வேண்டும் என்று முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு தமிழ்நாடு தகவல் ஆணையம் அதிரடி உத்தரவு பிறப்பித்து உள்ளது.

இந்த வழக்கில் கலெக்டர் அலுவலகத்தில் கொடுத்த மனு என்ன ஆனது? ஸிஜிமியில் பதில் சொல்லியே ஆக வேண்டும் என்றும், தகவல் அளிக்க மறுத்த அதிகாரிக்கு 25,000 ரூபாய் அபராதமும் விதித்து நோட்டீஸ் அனுப்பி தமிழ்நாடு தகவல் ஆணையம் உத்தரவிட்டது

முக்கிய அறிவிப்புகள்

இந்த வழக்கில் பல முக்கிய அறிவிப்புகள் வெளியிடப்பட்டு உள்ளது. அரசு அலுவலகத்தில் கொடுத்த மனுவின் நிலையை RTI மூலம் கேட்கலாம். முதலமைச்சர் தனிப்பிரிவு, குறைதீர் கூட்டம், ஜமாபந்தி மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரத்தை மறைக்க முடியாது!. பழைய உத்தரவைக் காட்டி RTI தகவலை மறுக்க முடியாது என்றும் தகவல் ஆணையம் உத்தரவு பிறப்பித்து உள்ளது

பொதுமக்கள் அளித்த மனுவைப் பெற்ற அரசு அலுவலகம் என்ன நடவடிக்கை எடுத்தது? 30 நாட்களுக்குப் பிறகு RTI மூலம் விவரம் கேட்கலாம்

இந்திய குடிமகன்களின் உரிமை

மாண்புமிகு முதலமைச்சர் தனிப்பிரிவில் கொடுக்கப்பட்ட மனு குறித்தோ, மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் குறைதீர்க்கும் நாளில் கொடுக்கப்பட்ட மனு குறித்தோ, ஜமாபந்தி நாட்களில் கொடுக்கப்பட்ட மனுக்கள் மீது எடுக்கப்பட்ட தொடர் நடவடிக்கைகள் குறித்து தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் படி அறிந்து கொள்ள மனுதாரருக்கு உரிமையுண்டு

இந்திய குடிமகன்கள் ஒவ்வொருவருக்கும் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு (3) இந்த உரிமையை அளிக்கிறது. அதன் அடிப்படையில் இந்திய நாட்டில் இருக்கக்கூடிய அனைத்து பொது அதிகார அமைப்புகளிடமும் தகவல்களை கோரும் உரிமை இந்திய நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும் உண்டு

தகவல் என்பதன் விளக்கம்

ஒரு இந்திய குடிமகன் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் அல்லது வேறு அரசுத்துறை அலுவலகத்தில் கொடுக்கும் ஒரு கோரிக்கை மனு, அந்த அலுவலகத்தில் உரிய அரசு அலுவலரால் பெறப்பட்டு அந்த மனுவிற்கு ஒரு அடையாள எண் தரப்படுகிறது. அவ்வாறு பெறப்பட்ட மனுவானது பொது அதிகார அமைப்பின் கீழ் வரும் போது அது ஆவணம் என்ற வரையறைக்குள் வருகிறது

இந்த ஆவணம் அதன் மீது எடுக்கப்பட்ட எல்லா நடவடிக்கைகளும் சட்டப்பிரிவு 2(f) படி ‘‘தகவல்‘‘ என்ற வரையறையின் கீழ் வருகிறது.

இதன்படி பொது அதிகார அமைப்புகளிடம் ஏற்கனவே ஆவண வடிவில் அல்லது மின்னணு முறையில் உள்ள எந்த ஒரு தரவையும் மக்கள் உரிமையுடன் பெறலாம்.

எந்தெந்த மனுக்கள் மீது கேள்வி கேட்கலாம்?

மாண்புமிகு முதலமைச்சர் தனிப்பிரிவில் கொடுக்கப்பட்ட மனு குறித்தோ மாவட்ட ஆட்சித்

தலைவர் அலுவலகத்தில் குறைதீர்க்கும் நாளில் கொடுக்கப்பட்ட மனு குறித்தோ, ஜமாபந்தி நாட்களில் கொடுக்கப்படும் மனு மற்றும் இதர பொது அதிகார அமைப்புகளிடம் கொடுக்கப்படும் மனுக்கள் மீது எடுக்கப்பட்ட தொடர் நடவடிக்கைகள் குறித்து தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் படி அறிந்து கொள்ள மனுதாரருக்கு உரிமையுண்டு.

பொது அதிகார அமைப்பு தான் பெற்ற மனு மீது உரிய நடவடிக்கை எடுக்க குறைந்தபட்ச கால அவகாசம் தேவைப்படுவதால் 30 நாட்களுக்குப் பிறகு மனுதாரர் தகவல் உரிமைச் சட்டத்தில் தகவல் கோரலாம். தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19(8)(a)(v) இன் கீழ் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் தங்கள் மாவட்டத்திலுள்ள அனைத்து பொது அதிகார அமைப்பின் பொதுத் தகவல் அலுவலர்களுக்கு தகவல் உரிமைச் சட்டம் 2005 தொடர்பான பயிற்சியை அளிக்க வேண்டும்

பொதுமக்கள் எப்படி RTI கேள்விகளை கேட்க வேண்டும்?

அரசு அலுவலகத்தில் மனு அளித்து 30 நாட்கள் ஆன பிறகு பின்வருமாறு கேள்விகளை எழுப்ப வேண்டும்

1.எனது மனு பெறப்பட்ட நாள் மற்றும் பதிவு எண் என்ன?

2.மனு எந்த அதிகாரிக்கு அனுப்பப்பட்டது?

மனுவின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் நாள் வாரியான விவரங்களை வழங்கவும்.

3.கோப்பில் உள்ள குறிப்புகள் மற்றும் பரிந்துரைகளின் சான்றளிக்கப்பட்ட நகல்களை வழங்கவும்.

4.மனு தற்போது எந்த அதிகாரியிடம் நிலுவையில் உள்ளது?

5.நடவடிக்கை எடுக்க நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடு என்ன?

6.தாமதத்திற்கான பதிவு செய்யப்பட்ட காரணங்களின் நகலை வழங்கவும்.

இறுதி உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தால் அதன் சான்றளிக்கப்பட்ட நகலை வழங்கவும் கோரிக்கை வழங்கலாம்.



தங்க.சீனிவாசன்

கோவை மாவட்ட குட்கா கடத்தலை துணிச்சலுடன் தடுத்த தலைமைக் காவலரை பாராட்டிய தமிழ்நாடு முதலமைச்சர் விஜய்!



கடந்த 27.09.2026 அன்று கோவில்பாளையம் காவல் நிலைய தலைமைக் காவலர் திரு.வேல்முருகன் (456), குட்கா பொருட்களை கடத்திச் சென்றவர்கள் காரில் தப்பிச் செல்ல முயன்றபோது, தனது உயிரையும் பொருட்படுத்தாமல் தப்பிச் சென்ற காரின் மேற்கூரையில் ஏறி, குற்றவாளிகள் தப்பிச் செல்வதைத் தடுக்கும் நோக்கில் சுமார் 40 கி.மீ. தூரம் மிகுந்த துணிச்சலுடன் பயணித்தார்.

தொடர்ந்து காவல்துறையினரின் ஒருங்கிணைந்த நடவடிக்கையால், மேற்படி வாகனம் அவிநாசி அருகே தடுத்து நிறுத்தப்பட்டது. இதில் தொடர்புடைய மூன்று நபர்கள் கைது செய்யப்பட்டு, அவர்களிடமிருந்து 233 கிலோ குட்கா பொருட்கள் மற்றும் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட கார் பறிமுதல் செய்யப்பட்டது. தலைமைக் காவலர் திரு.வேல்முருகனின் (பிசி 456) சிறப்பான துணிச்சல், சமயோசிதம் மற்றும் கடமை உணர்வைப் பாராட்டி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அவரை நேரில் அழைத்து, அவரது வீரதீர செயலுக்கு பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்தார்.

மேலும்,தமிழ்நாடு காவல்துறை இயக்குநர் அவர்களும் தலைமைக் காவலர் திரு. வேல்முருகனை நேரில் பாராட்டி, அவரது சிறப்பான துணிச்சல் மற்றும் கடமை உணர்விற்கு வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

தனது உயிருக்கு பெரும் ஆபத்து ஏற்படும் சூழ்நிலையிலும் கடமை உணர்வுடன் துணிச்சலாக செயல்பட்ட தலைமைக் காவலர் 456 திரு. வேல்முருகனின் வீரதீர செயல் அனைவரது பாராட்டையும் பெற்றுள்ளது.



செல்வி ஸ்ரீஷா அவர்களின் ஸ்ரீ அரங்கம் சார்பில்

நான்கு மாணவிகளுக்கு சலங்கை பூஜை

பல்வேறு பாவனை, நளினங்களுடன் திறமையை நிரூபித்த மாணவிகள்

செல்வி ஸ்ரீஷா அவர்களின் ஸ்ரீ அரங்கம் சார்பில் நான்கு மாணவிகளுக்கு சலங்கை பூஜை நிகழ்ச்சி சென்னை மயிலாப்பூரில் உள்ள புகழ்பெற்ற சபாவான பாரதிய வித்யா பவனில் நடைபெற்றது

இந்த நிகழ்ச்சியில் செல்வி ஸ்ரீஷா அவர்களின் ஸ்ரீ அரங்கம் சார்பில் பயிற்சி பெற்ற நான்கு மாணவிகள் தங்களின் சலங்கை பூஜை நிகழ்ச்சியை சிறப்பாக நிறைவு செய்தனர். அவர்களுடன் தற்போது படித்துக் கொண்டிருக்கும் மேலும் பல மாணவிகளும் குழுவினராக பல்வேறு பாவனை, நளினங்களுடன் சிறப்பாக நடனமாடி தங்கள் திறமையை வெளிக்காட்டி பார்வையாளர்களின் பாராட்டை பெற்றனர்

சலங்கை பூஜை செய்தவர்கள் :

1.K.தனுஷ்கா (திருமதி K.வித்யா மற்றும் திரு கே.குமார் அவர்களின் மகள்), தனலஷ்மி மேல்நிலைப் பள்ளியில் 8 ஆம் வகுப்பு படிக்கிறார். 2.H.ஈவாஸ் அஃப்ரிஹா (திருமதி H.விண்ணரசி மற்றும் திரு.P.ஹென்றி அவர்களின் மகள்) MSSW கல்லூரியில் MSC கவுன்சிலிங் சைக்காலஜி (ஆலோசனையியல் உளவியல்) படிக்கிறார். 3.V.ஸ்ரீதர்ஷினி (திருமதி V.திவ்யா மற்றும் திரு.M.வினோத் குமார் அவர்களின் மகள்) செயின்ட் கெவின்ஸ் ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப் பள்ளியில் 8ஆம் வகுப்பு படிக்கிறார். 4.R.சாய் பிரீத்தி (திருமதி R.பமீலா மற்றும் திரு. M.ராம்குமார் அவர்களின் மகள்) மரியா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் 6ஆம் வகுப்பு படிக்கிறார்.

இந்த சலங்கை பூஜை நிகழ்ச்சியில் நட்டுவாங்கம்: செல்வி ஸ்ரீஷா, பாடகர்: விருத்திகேஷ்வர் நாராயணன், மிருதங்கம் : மானஸ் மனோஜ், வயலின் : சதீஷ் குமார், புல்லாங்குழல் : ஹரிஹரன் ஜெயக்குமார் ஆகியோர் சிறப்பான பங்களிப்பை அளித்தனர்

இந்த நிகழ்ச்சியில் சலங்கை பூஜையில் கலந்து கொண்ட மாணவிகளின் பெற்றோர்கள், உறவினர்கள் மற்றும் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர். நிகழ்ச்சியில் மாணவிகள் தங்கள் அனுபவங்களை பகிர்ந்தனர். அப்போது, செல்வி ஸ்ரீஷா அவர்கள் தங்களுக்கு சிறப்பாக பயிற்சி அளித்ததுடன் பரத நாட்டிய கலையின் நுணுக்கங்களையும் வாழ்வின் ஒழுங்கையும் கற்றுக் கொடுத்து முன்னேற்றப் பாதையில் செல்ல உறுதுணையாக இருந்தார் என்று தெரிவித்தனர்.

செல்வி ஸ்ரீஷாவின் அனுபவங்கள்

செல்வி ஸ்ரீஷா தனது அனுபவங்கள் பற்றி கூறுகையில், தான் சிறுவயதில் பயிற்சி பெற்றபோது ஏற்பட்ட அனுபவங்களை நினைவு கூர்ந்து தனது குருவாக விளங்கியவர்களுக்கும் தனது மனதை கவர்ந்து தனக்கு வழிகாட்டியாக திகழ்ந்தவர் களையும் தனது முன்னேற்றத்திற்கு உதவியவர்களையும் நினைவு கூர்ந்தார்.

தனது இந்த வளர்ச்சிக்கு தனது தாயார் சந்திரகலா அவர்கள் தனக்கு உறுதுணையாக இருந்து ஊக்கப்படுத்தினார் என்றும், தன்னுடைய நாட்டிய பள்ளியான ஸ்ரீ அரங்கம் வெற்றிகரமாக நடைபெற நேரம் காலம் பார்க்காமல் கடினமாக உழைத்து அதிக பங்களிப்பு அளித்ததாகவும், மாணவிகளை ஊக்கப்படுத்தும் வகையில்



சிறப்பான கருத்துக்களை எடுத்துக்கூறி மோட்டிவேஷன் ஸ்பீச் கொடுத்து மாணவிகளை ஊக்கப்படுத்துவார் என்றும், தான் இல்லாத சமயங்களில் முழுமை யாக அர்ப்பணிப்பு உணர்வுடன் செயல்பட்டார் என்றும் கூறினார்.

செல்வி ஸ்ரீஷா அவர்கள் பற்றிய விவரங்கள் :

சென்னை ஐசிஎஃப் இல் அதிகாரியாக பணியாற்றும் திரு.சோலையப்பன் மற்றும் திருமதி சந்திரகலா ஆகியோரின் மகளான ஸ்ரீஷா, ஒரு பரதநாட்டியக் கலைஞர் மற்றும் ஆசிரியை ஆவார். இவரது நடனப் பயணம் ஆரம்பப் பள்ளிக் காலத்திலேயே தொடங்கி, இந்த கலை வடிவத்தின் மீது வாழ்நாள் முழுவதுமான பற்றாக மலர்ந்தது.

இவரது அடிப்படைப் பயிற்சி, சென்னையின் புகழ்பெற்ற கலாஷேத்ரா அறக்கட்டளையில் அமைந்தது. அங்கு இவர் பரதநாட்டியத்தில் பட்டயம் (2020 - 2024) உட்பட ஆறு ஆண்டுகள் தீவிரமான பயிற்சிகளை நிறைவு செய்தார்.

இவரது கலை உணர்வுகள் மதிக்கத்தக்க குருநாதர்களால் வளர்க்கப்பட்டன.

நடனத்தின் மீது இவருக்கு முதல் ஈர்ப்பை ஏற்படுத்தியவர்கள் ஸ்ரீமதி தங்க மீனாட்சி, மற்றும் கலாஷேத்ராவில் டாக்டர் நிர்மலா நாகராஜனின் வழிகாட்டுதலின் கீழ், ஸ்ரீமதி திவ்யா ஹரிபத்மன், ஸ்ரீ ஜெயகிருஷ்ணன், ஸ்ரீமதி ஸ்ரீதேவி ஜெயகிருஷ்ணன், ஸ்ரீ கிரிஷ் மது மற்றும் ஸ்ரீமதி வர்ஷா அக்கோரி ஆகியோர் செல்வி ஸ்ரீஷா அவர்களுக்கு நடனத்தின் மீது தீராத காதல் ஏற்பட காரணம் ஆவார்கள்.

அவர்கள் மூலம், இவர் வெறும் நுட்பங்களை மட்டும் கற்காமல், பாரம்பரிய நடனத்தை ஒரு வாழ்க்கை முறையாக வரையறுக்கும் ஒழுக்கம், நேர்த்தி மற்றும் ஆழத்தையும் உள்வாங்கிக் கொண்டார்.

இவர் கலாஷேத்ராவில் நடனமாடும் பெருமையையும், கின்னஸ் உலக சாதனை நிகழ்வொன்றில் பங்கேற்கும் வாய்ப்பையும் பெற்றுள்ளார்.

சர்வதேச அளவில் தனது கலையை மேலும் வளர்க்கும் விதமாக, துபாயில் உள்ள 'ஸ்பந்தா' (Spanda) மையத்தில் பரதநாட்டிய உதவி ஆசிரியராகப் பணியாற்றி, இளம் தொடக்கநிலை மாணவர்களுக்கு நடனத்தின் முதல் அடிகளைப் பயிற்றுவித்தார்.

சென்னை இராயபுரம் பகுதியில் ஜூன் 2024 ஆம் ஆண்டு, செல்வி ஸ்ரீஷா 'ஸ்ரீ அரங்கம்' என்ற நடனப் பள்ளியை நிறுவினார். இது கலை ஆன்மாக்களை வளர்ப்பதற்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு இடமாகும். தனது குருநாதர்கள் தனக்கு அளித்த மதிப்புகள், ஒழுக்கம் மற்றும் பாரம்பரியத்தை அடுத்த தலைமுறை நடனக் கலைஞர்களிடம் கொண்டு சேர்ப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

"ஒரு சிறுமியின் முதல் அடியுடன் தொடங்கிய இந்த கலைப் பயணம், பல குருநாதர்களையும் ஆண்டுகளையும் கடந்து, இன்று பல மாணவர்களிடம் ஒரு புதிய வாழ்வைக் கண்டடைந் துள்ளது. இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவரும் செல்வி ஸ்ரீஷா மற்றும் மாணவிகள் அனைவரையும் ஆசிர்வதித்து இவர்கள் மேன்மேலும் உயர்ந்து பல்வேறு புகழ்களை பெற்று சிறந்து விளங்க வேண்டும் என்று வாழ்த்தினர்.

மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தல் முந்துவது யார்?
தீக், தீக் மனநிலையில் மூன்று கட்சிகள்
பொதுமக்கள் கூறுவது என்ன?

தமிழகத்தில் நடைபெற உள்ள மதுராந்தகம், தாராபுரம் தொகுதி இடைத்தேர்தலில் யார் வெற்றி பெறுவார்? என்று எதிர்பார்ப்பு பொதுமக்கள் மனதிலும், அனைத்து அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்களாலும் உன்னிப்பாக



கவனிக்கப்படுகிறது

இந்த தேர்தலில் வெற்றி பெறுபவர்களும் தோல்வி பெறுபவர்களின் அடுத்தடுத்த அரசியல் எதிர்காலம் பலவித மாற்றங்களுக்கு உள்ளாகும் என்று அரசியல் ஆர்வலர்களால் கணிக்கப்படுகின்றது. இத்தகைய மிக முக்கியமான சூழ்நிலையில் இரண்டு தொகுதிகளுக்கும் இடைத்தேர்தல் நடைபெற உள்ளது. இதற்கு முன்பு தமிழகத்தில் நடைபெற்ற இடைத்தேர்தலில் எப்படி இருந்தாலும் ஆளுங்கட்சி தான் பணம் கொடுத்து வெற்றி பெறும் என்று அனைவரின் முடிவாக இருந்து வந்தது. மேலும் இதற்கு முன்பு இடைத்தேர்தல் நடைபெற்ற சமயங்களில் ஆளுங்கட்சி முழுமையான மெஜாரிட்டியுடன் ஆட்சியை நடத்தி வந்தது. இடைத்தேர்தலில் வெற்றி, தோல்வி ஆளுங்கட்சிக்கு எந்தவிதமான தாக்கத்தையும் ஏற்படுத்தாத போதிலும், அப்போது இருந்த இரண்டு ஆளுங்கட்சிகளும் இடைத்தேர்தல்களை தங்களின் ஈகோ பிரச்சினையாகவும், பொது மக்களின் மத்தியில் எழுந்துள்ள ஆளுங்கட்சி மீதான அதிருப்தி வெளியில் தெரியாமல், அனைவரும் ஆளுங்கட்சியை ஆதரிப்பதாக ஒரு கருத்து மாயையை கருத்து திணிப்பை உருவாக்கும் எண்ணத்தில், தங்கள் ஆட்சி மிகச் சிறப்பாக 50 க்கும் மேற்பட்ட சதவீத வாக்காளர்களிடம் தங்களின் ஆளும் அரசு ஆதரவு பெற்றிருப்பதாக காட்டிக் கொள்ளும் வகையில், தீவிரமாக பணத்தை அடிப்படையாகக் கொண்டு இடைத் தேர்தல்களை சந்தித்து வந்ததாக கூறப்பட்டது.

ஆனால் இன்றைய சூழ்நிலையில் சூழல் மாறி உள்ளது. இப்பொழுது நடைபெறும் தேர்தல் முதல்வர் விஜய் தலைமையிலான தமிழக வெற்றி கழகம் ஆட்சிக்கு மிக முக்கியமான தேர்தலாக பார்க்கப்படுகின்றது. ஏனெனில் தாவெக ஆட்சிக்கு முழு மெஜாரிட்டி கிடைக்காமல் மேலும் சில இடங்கள் குறைவாக உள்ளது. எனவே ஆளுங்கட்சியில் வெற்றி பெற்றால் தங்களுடைய சொந்தக் கட்சியின் எம்எல்ஏக்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்றும், கூட்டணி கட்சிகளின் அச்சுறுத்தல் இல்லாமல், தாங்கள் விருப்பப்பட்டும் சில முக்கிய திட்டங்களை நிறைவேற்றலாம் என்பதும் ஆளுங்கட்சியினரின் கருத்தாக உள்ளது. எனவே ஆளுங்கட்சியின் தலைவர்களும் தொண்டர்களும் முதலமைச்சர் விஜயின் ரசிகர்களாக இருந்தவர்களும் தீவிரமாக இந்த இரண்டு தொகுதிகளிலும் பணியாற்றி தாவெக வெற்றி பெற வேண்டும் என்று தீவிரமாக உழைத்து வருகின்றனர்.

அதே சமயத்தில் கடந்த சட்டமன்றத் தேர்தலில் இந்த இரண்டு தொகுதிகளிலும் மதுராந்தகம் தொகுதியில் தாவெக இரண்டாவது இடத்திலும், தாராபுரம் தொகுதியில் மூன்றாவது இடத்தை மட்டுமே பெற்றது குறிப்பிடத்தக்கது. இந்த இரண்டு தொகுதிகளிலும் கடந்த சட்டமன்ற தேர்தலில் அதிமுக வெற்றி பெற்றிருந்ததால், இது அதிமுகவின் தலைவர்களுக்கு மிக முக்கியமான பிரச்சனையாக உள்ளது. இந்த இரண்டு தொகுதிகளிலும் மீண்டும் வெற்றி பெற்று அதிமுக ஆதரவு வாக்காளர்களை தக்கவைக்க வேண்டும் என்றும், இல்லையெனில் சில அரசியல் ஆராய்ச்சியாளர்கள் கூறுவதுபோல் அதிமுக ஆதரவு வாக்காளர்கள், தவெக ஆதரவு

நிலைப்பாட்டை எடுத்து அடுத்து வரும் இடைத்தேர்தல்கள், உள்ளாட்சி தேர்தல், பாராளுமன்ற தேர்தல்களில் அதிமுக பெரும் பின்னடைவை சந்தித்து, முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி அவர்களின் தலைமை கேள்விக்குறியாகி, அதிமுக என்ற கட்சி காணாமல் போய் நாதக, பாமக, பாஜக போல் ஒரு சிறிய கட்சியாக மாறி, அடுத்து வரும் காலத்தில் கரைந்து போகலாம் என்று அச்சம் ஏற்பட்டு உள்ளது.

திமுகவை பொறுத்தவரை அந்த கட்சி தற்போது சட்டமன்றத்தில் எதிர்க்கட்சியாக இருப்பதற்கு ஏற்ற வகையில், தவெக கட்சிக்கு கடுமையான சவாலையும் போட்டியையும் அளிக்க வேண்டும் என்று தீவிரமாக களப்பணியாற்றி வருகிறது. திமுக தலைவரும் முன்னாள் முதல்வருமான மு.க.ஸ்டாலின் எதிர்க்கட்சித் தலைவரான மற்றும் வருங்கால திமுக முகமாக கருதப்படும் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் தீவிரமாக தங்கள் கட்சி நிர்வாகிகளை முடுக்கிவிட்டு தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். சென்ற தேர்தலில் மதுராந்தகத்தில் மூன்றாவது இடம் பிடித்ததால் திமுகவினர் மத்தியில் கலக்கமும் ஏற்பட்டு உள்ளது. திமுக வெற்றி பெறும் என்று எதிர்பார்க்கப்பட்ட கடந்த சட்டமன்ற தேர்தலிலேயே கட்சி மூன்றாவது இடம் பிடித்த மதுராந்தகம் தொகுதியில் நடைபெறும் இடை தேர்தலும், இரண்டாவது இடம் பிடித்த தாராபுரத்தில் இந்த முறை மூன்றாவது இடம் போய்விட்டால் கட்சியின் அடுத்த கட்ட வளர்ச்சியும், கட்சி தொண்டர்களிடம் உற்சாகமும் இழந்து அமைதியாகி விடுவார்கள் என்ற அச்சம் ஏற்பட்டு உள்ளது. எனவே இந்த தேர்தலில் கடும் போட்டியை அளித்து திமுகவை நிலை நிறுத்த வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர்.

இத்தகைய இக்கட்டான சூழ்நிலையை கொண்டுள்ள மூன்று கட்சிகளும் இடைத்தேர்தலை ஒரு முக்கிய களமாக கருதி தீவிரமாக உழைத்து வரும் நிலையில், நமது நீதியின் நுண்ணறிவு டீம் களத்தில் சுற்றி வந்த வகையில், தாவெக தொண்டர்கள் அதிக அளவில் தீவிரமாக பணியாற்றி வருவது கண்கூடாக தெரிந்தது?. மேலும் முதல்வர் விஜய் மீதான ஈர்ப்பால் எந்த கட்சியையும் சாராத பொதுமக்கள் பெரும்பாலானோர் தாவெக கட்சிக்கு ஆதரவளிக்கும் மன நிலையிலேயே உள்ளதாக நமது நீதியின் நுண்ணறிவு கள ஆய்வு டீம் கணிக்கிறது. இரண்டு தொகுதிகளிலும் வெற்றி பெற்று தாவெக முன்னிலை வகிக்கும் என்று கள நிலவரம் தெரிவிப்பதாக நமது நீதியின் நுண்ணறிவு கள ஆய்வு டீம் கருத்து தெரிவித்துள்ளது.

அடுத்து உள்ள இரண்டாவது இடத்திற்கே மற்ற இரண்டு திராவிட கட்சிகளிடம் போட்டி ஏற்பட்டுள்ளதாகவும், அதில் இரண்டு கட்சிகளின் தொண்டர்கள் மத்தியில், தங்களது கட்சி டெபாசிட் இழந்து விடக்கூடாது என்று சற்று கலக்கமும் ஏற்பட்டு உள்ளது அந்த கட்சி நிர்வாகிகளிடையே மற்றும் தொண்டர்களிடையே பேசும்பொழுது தெரிய வருகிறது. ஏதாவது ஒரு திராவிட கட்சி இந்த முறை டெபாசிட் தொகையை இழக்கும் என்று நம்பப்படுகிறது. ஆகவே அந்த திராவிட கட்சி நம்முடைய கட்சியாக இருக்க கூடாது என்று இரண்டு கட்சியின் தொண்டர்களும் தீவிரமாக தளத்தில் பணியாற்றி வருவதாக நமது நீதியின் நுண்ணறிவு கள ஆய்வு டீம் தெரிவிக்கிறது

இதைத் தவிர போட்டியில் உள்ள சீமானின் நாம் தமிழர் கட்சி 3% வாக்குகளுக்கு உள்ளாகவே பெறும் என்றும், கம்யூனிஸ்ட் கட்சிகள் மதுராந்தகம் தொகுதியில் 1% வாக்குகள் கூட பெறாது என்றும் தாராபுரம் தொகுதியில் அதைவிட சற்று கூடுதலாக பெறலாம் என்று தெரிகிறது

குப்பையில் கிடந்த 7 சவரன் தங்க நகைகளை ஒப்படைத்த தூய்மைப் பணியாளர்

மயிலாப்பூர் பகுதியில் குப்பைகளைச் சேகரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த தூய்மைப் பணியாளர் மோகன் காந்தி, அங்கு கிடந்த 7 சவரன் தங்க நகைகளை கண்டெடுத்து, உடனடியாக மயிலாப்பூர் காவல் நிலையத்தில் ஒப்படைத்தார்.

காவல்துறையினர் முன்னிலையில், அந்த தங்க நகைகள் அதன் உரிய உரிமையாளரிடம் மீண்டும் ஒப்படைக்கப்பட்டன.

கண்டெடுத்த நகைகளை நேர்மையுடன் ஒப்படைத்த மோகன் காந்தியின் செயலை காவல் துறை அதிகாரிகள், சென்னை மாநகராட்சி அதிகாரிகள், பொதுமக்கள் அனைவரும் வெகுவாக பாராட்டினர்.



காவல்துறை தலைமை இயக்குநர்/காவல் படை தலைவர் அலுவலகம், சென்னை தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநர்/காவல் படைத்தலைவர் திருச்சி மாவட்ட காவல் அலுவலகத்தில் மத்திய மண்டலத்தின் சட்டம் ஒழுங்கு மற்றும் குற்ற நிலவரம் குறித்து ஆய்வு



தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநர் / காவல் படைத்தலைவர் டாக்டர்மகேஷ் குமார் அவரிவால், அவர்கள் திருச்சி மாவட்ட காவல் அலுவலகத்தில் மத்திய மண்டலத்தின் சட்டம்ஒழுங்கு மற்றும் குற்ற நிலவரம் தொடர்பாக விரிவான ஆய்வினை மேற்கொண்டார். இவ்வாய்வுக் கூட்டத்தில், மத்திய மண்டல காவல்துறைத் தலைவர். திருச்சி மாநகர காவல் ஆணையர், திருச்சி மற்றும் தஞ்சாவூர் சரகங்களின் துணை காவல்துறைத் தலைவர்கள், மத்திய மண்டலத்திற்குட்பட்ட 9 மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் திருச்சி மாநகர துணை காவல் ஆணையர்கள் மற்றும் கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

காவல்துறை தலைமை இயக்குநர் / காவல் படைத்தலைவர் அவர்கள், திருச்சி மாவட்டத்தில் தரவு மையத்தை திறந்து வைத்ததுடன், காணொளி காட்சி வாயிலாக மத்திய மண்டலத்திற் குட்பட்ட மற்ற மோவட்டங்களிலும் அமைக்கப்பட்டுள்ள இதேபோன்ற தரவு மையங்களையும் ஒரே நேரத்தில் திறந்து வைத்தார். இத்தரவு மையத்தின் மூலம் காவல் நிலைய பதிவு கள், குற்றப் புலனாய்வு தொடர்பான விவரங்கள், வாகனத் தகவல்கள் மற்றும் பல்வேறு டிஜிட்டல் காவல் சேவைகள் உள்ளிட்ட தகவல்களை காவல்துறையினர் எளிதில் அணுக முடியும்.மேலும், சேமிக்கப்பட்டுள்ள தரவுகளை பகுப்பாய்வு செய்வதன் மூலம் குற்றப் போக்குகளை கண்டறிதல் தொடர்குற்றங்களில் ஈடுபடும் நபர்களை கண்காணித்தல், பல்வேறு வழக்குகளுக்கிடையேயான தொடர்புகளை கண்டறிதல், குற்றத் தடுப்பு நடவடிக்கை களுக்கு தேவையான உளவுத் தகவல்களை வழங்குதல், சமூக வலைதள ஊடக கண்காணிப்பு, வெளிநாட்டவர் கண்காணிப்பு மற்றும் சட்டம் ஒழுங்கு பணிகளுக்கான தரவு அடிப்படையிலான முடிவெடுப்பை மேற்கொள்ளுதல் ஆகியவற்றுக்கு இத்தரவு மையம் உதவுகிறது.

காவல்துறை தலைமை இயக்குநர் / காவல் படைத்தலைவர் அவர்கள், சட்டம்ஒழுங்கை திறம்பட பராமரித்தல், குற்றங்களைத் தடுத்தல் மற்றும் கண்டறிதல், தடுப்பு காவல் நடவடிக்கைகளை வலுப்படுத்துதல் ஆகியவற்றை வலியுறுத்தினார். குறிப்பாக, சரித்திரப் பதிவேடு கொண்ட குற்றவாளி கள் மீது தீவிர நடவடிக்கை மேற்கொள்ளவும், அவர்களின் நடவடிக்கைகள் மற்றும் வழக்குகளைத் தொடர்ந்து கண்காணிக்கவும். தேவையான சந்தர்ப்பங்களில் பிணை ரத்து நடவடிக்கைகளை திறம்பட



மேற்கொள்ளவும், காவல் நிலைய அளவில் தொடர் கண்காணிப்பு மற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அறிவுறுத்தினார்.

மேலும், பெண்கள், குழந்தைகள் மற்றும் மூத்த குடிமக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்த வேண்டும் என்றும், பொதுமக்களின் தீவிர பங்களிப்புடன் போதைப்பொருள் இல்லாத காவல் நிலைய சரகங்களை உருவாக்குவதற்கான நடவடிக்கை களை மேற்கொள்வதுடன், போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளை தொடர்ந்து தீவிரமாக மேற்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

போதை இல்லா தென்காசி மாவட்டமாக மாற்ற மாவட்ட காவல் அலுவலகத்தில் கலந்துரையாடல்!



தென்காசி மாவட்டத்தை போதை இல்லா மாவட்டமாக மாற்றும் முயற்சியாக திருநெல்வேலி சரக காவல்துறை துணைத் தலைவர் முனைவர் இரா. திருநாவுக்கரசு, இ.கா.ப., அவர்களின் தலைமையில் தென்காசி மாவட்டத்தில் போதைப் பழக்கம் இல்லாத கிராமங்கள் என தேர்ந்தெடுக்கப்பட்ட 33 கிராமத்திற்கு இரண்டு நபர்கள் என்ற வீதம் தென்காசி மாவட்ட காவல் அலுவலகத்திற்கு வரவழைத்து கலந்துரையாடல் நடைபெற்றது.

இதில் போதை இல்லா கிராமத்தை உருவாக்க காவல்துறை மற்றும் பொதுமக்கள் இணைந்து போதைப் பொருள் பழக்கத்தை எவ்வாறு கட்டுப்படுத்தப்பட்டது என கலந்துறை செய்து பிற கிராமங்களிலும் நடைமுறை செய்வது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

மேலும் தங்கள் கிராமத்தைப் போல் பிற கிராமங்களிலும் புகையிலை பொருட்கள், கஞ்சா போன்ற போதை பொருள்களின் புழக்கம் முற்றிலும் கட்டுப்படுத்த இளைஞர்களுக்கு தொடர் விழிப்புணர்வு ஏற்படுத்துதல், போதை பொருள் விற்பனை குறித்த ரகசிய தகவல்களை காத்தல், முக்கிய பகுதிகளில் பேரிக்காடுகள் அமைத்தல், வாகன தணிக்கையில் ஈடுபடுதல், கண்காணிப்பு கேமராக்கள் பொருத்துதல் போன்ற முன் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து ஆலோசிக்கப் பட்டது.

இந்நிகழ்வில் தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.S. அசோக்குமார் அவர்கள், கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள், துணைக் காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் காவல் ஆய்வாளர்கள் உடனிருந்தனர்.



பலதுறைகளில் கால்பதித்து சாதனை படைத்து வரும் டாக்டர் கே.கார்த்திகேயன் I.P.S.

கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த டாக்டர் கே.கார்த்திகேயன் I.P.S. அவர்கள் தமிழ்நாடு cadre-ஐச் சேர்ந்த இந்திய காவல் பணி அதிகாரி ஆவார். இவர் சென்னை அரசு பல் மருத்துவக் கல்லூரியில் பல் மருத்துவத்தில் முதுகலை பட்டம் பெற்றுள்ளார். மருத்துவப் பணிக்குப் பிறகு, விரிவுரையாளராகப் பணியாற்றிக் கொண்டே யுபிஎஸ்சி தேர்வுக்குத் தயாரானார். தனது இரண்டாவது முயற்சியிலேயே ஹிறிஷிசி தேர்வில் அகில இந்திய அளவில் 754 வது இடத்தைப் பெற்று ஐபிஎஸ் அதிகாரியாகத் தேர்வானார்.

இவர் தற்போது தாம்பரம் மாநகர காவல் ஆணையரகத்தின் சட்டம் ஒழுங்கு துணை ஆணையராக நியமிக்கப்பட்டு பணியாற்றி வருகிறார். முன்னதாக இவர் கோயம்புத்தூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளராகப் பணியாற்றியுள்ளார். அப்பொழுது கோவையின் சட்டம் ஒழுங்கைப் பராமரிக்க பல முன்னெடுப்புகளைச் செய்தார். இதைத் தொடர்ந்து திருவண்ணாமலை மாவட்ட காவல் கண்காணிப்பாளராகப் பணியாற்றினார். அப்போது பல திருட்டு வழக்குகளைத் துப்பு துலக்கி பொதுமக்களின் பாராட்டை பெற்றார்.

தாம்பரம் மாநகர காவல்துறையில் அதிரடி நடவடிக்கை

திரு. கார்த்திகேயன் I.P.S. சிறந்த துப்பாக்கிச் சுடும் வீரராக திகழ்ந்தார். இவர், மாநில மற்றும் மண்டல அளவிலான போட்டிகளில் கலந்து கொண்டு பல பதக்கங்களை வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. துப்பாக்கிச் சுடுதல் போட்டிகளில் திறமையான கார்த்திகேயன் I.P.S.2021 ஆம் ஆண்டு காவல் துறை அதிகாரிகளுக்காக நடத்தப்பட்ட மாநில அளவிலான துப்பாக்கிச் சுடுதல் போட்டியில் பங்கேற்று "சாம்பியன் ஆஃப் சாம்பியன்ஸ்" கோப்பையை வென்று சாதனை படைத்தார்

டாக்டர் கே.கார்த்திகேயன், மிறிஷி அவர்கள் காவல் துறையிலும், பிற களங்களிலும் முக்கியப் பணிகள் பலவற்றை ஆற்றியுள்ளார். கோவை மாவட்ட SP-யாகவும், தாம்பரம் மற்றும் கீழ்ப்பாக்கம் காவல் துணை ஆணையராகவும் பணியாற்றிய போது, மக்கள் அதிகம் கூடும் பகுதிகள் மற்றும் மாவட்ட எல்லைகளில் CCTV கண்காணிப்பு

கேமராக்கள் மற்றும் ரோந்துப் பணிகளை அதிகரிக்கச் செய்து பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்து பாராட்டை பெற்றார். இளைஞர்கள் மற்றும் மாணவர்களை இலக்காகக் கொண்டு விற்கப்படும் கஞ்சா, தடைசெய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள் மற்றும் போதை மாத்திரைகளுக்கு எதிராகத் தீவிர சோதனைகளை நடத்தி, அவற்றின் விநியோகச் சங்கிலியைக் கட்டுப்படுத்துவதில் சிறப்பு கவனம் செலுத்தினார். காவல்துறையை அணுகுவதில் மக்களுக்கு உள்ள பயத்தைப் போக்க, பொதுமக்கள் அளிக்கும் புகார்களுக்கு உடனுக்குடன் தீர்வு காண்பதற்கான சிறப்பு முகாம்கள் மற்றும் குறைதீர்க்கும் கூட்டங்களை தற்பொழுதும் தவறாமல் நடத்தி வருகிறார்.

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான பாதுகாப்புத் திட்டங்களை குறிப்பாக காவலன் செயலியை மக்களிடம் கொண்டு சேர்ப்பது உள்ளிட்ட முக்கிய திட்டங்களை தீவிரப்படுத்தினார். சைபர் குற்றங்கள், போதைப்பொருள் தடுப்பு மற்றும் பாலியல் வன்கொடுமைகளில் இருந்து தங்களை தற்காத்துக் கொள்வது குறித்து மாணவர்களிடையே விழிப்புணர்வு முகாம்களை ஒருங்கிணைத்து வருகிறார்.

தாம்பரம் மாநகரக் காவல் துறை, பொது மக்கள் காவல் சேவைகளை எளிதாகப் பெறும் வகையில் 'TAMBARAM WhatsCop' எனும் செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பம் சார்ந்த வாட்ஸ் அப் சாட்பாட் சேவையை அறிமுகப்படுத்தியது.

சேவையைத் தொடங்க பொதுமக்கள் 9344222100 என்ற எண்ணிற்கு வாட்ஸ்அப் மூலம் "பிவீ" என்று அனுப்ப வேண்டும். இதன்மூலம் அவசர உதவி மற்றும் பாதுகாப்பு: அவசர கால உதவிகள் மற்றும் பெண்களுக்கான பாதுகாப்பு கண்காணிப்பு பெறலாம். போக்குவரத்து தொடர்பான புகார்கள், இணையவழி குற்றப் புகார்கள் மற்றும் தொலைந்துபோன/திருடப்பட்ட அலைபேசிகள் குறித்த புகார்கள் பூட்டப்பட்ட வீடுகளைக் கண்காணித்தல் போன்ற சேவைகளை பெறலாம்.

போதைப்பொருள் தொடர்பான செயல்பாடுகள் குறித்துத் தகவல் அளித்தல், போக்குவரத்து அபராதத் தொகையைச் செலுத்துதல். அருகிலுள்ள காவல் நிலையத்தைக் கண்டறிதல் - காவல் துறை சேவை குறித்த கருத்துகளைப் பதிவு செய்தல். பாதுகாப்பாகவும் தொடர்பிலும் இருக்க, இந்தத் தொடர்பு எண்ணைச் சேமித்து, தாம்பரம் பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் பயன்படுத்தி கொள்ளலாம் என்று அறிவித்து பொதுமக்கள் மற்றும் காவல்துறை உயர் அதிகாரிகளின் பாராட்டை பெற்றார்

இத்தகைய பலவிதமான துறைகளில் திறமைகளை வளர்த்து சாதனைகளை படைத்து வரும் திரு கார்த்திகேயன் ஐபிஎஸ் அவர்களின் பணி மேன்மேலும் சிறந்து, மிக மிக உயர்ந்த பதவியை அடைய நீதியின் நுண்ணறிவு மாத இதழ் சார்பில் மனமார்ந்த வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்



கோயம்பேடு பேருந்து முனைய வாகன நிறுத்துமிடத்தில் நிறுத்தியிருந்த இருசக்கர வாகனத்தை திருடிய நபர் கைது. இருசக்கர வாகனம் மீட்பு .

சென்னை, மதுரவாயல், சீமாத்தம்மன் நகரில் வசித்து வரும் முத்து, வ/56, த/வெ.தங்கவேல் என்பவர் கடந்த 03.10.2026 அன்று மாலை, அவரது இருசக்கர வாகனத்தில் கோயம்பேடு முனையம் (CMBT) சென்று, அங்குள்ள இருசக்கர வாகனம் நிறுத்துமிடத்தில் அவரது யமஹா இருசக்கர வாகனத்தை நிறுத்திவிட்டு சென்றதாகவும், பின்னர் சிறிது நேரத்தில் கழித்து வந்து பார்த்தபோது, அவரது யமஹா இருசக்கர வாகனத்தை யாரோ திருடிச் சென்றதாகவும், மேற்படி திருட்டில் ஈடுபட்ட நபரை கண்டுபிடித்து, திருடு போன இருசக்கர வாகனத்தை மீட்டுத் தருமாறும் முத்து என்பவர் K-11 CMBT காவல் நிலைய குற்றப்பிரிவில் கொடுத்த புகார் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

K-11 CMBT காவல் நிலைய குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்தும், சிசிடிவி கேமரா பதிவுகளை ஆய்வு செய்தும், மேற்படி திருட்டு சம்பவத்தில் ஈடுபட்ட எதிரி அப்துல் சமீர், வ/19, பவானி நகர், செங்குன்றம், சென்னை என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து புகார் தாரரின் Yamaha R15 இருசக்கர வாகனம் மீட்கப்பட்டது.



விசாரணையில் எதிரி அப்துல் சமீர் மீது ஏற்கனவே ஒரு திருட்டு வழக்கு உள்ளது தெரியவந்தது. கைது செய்யப்பட்ட எதிரி அப்துல் சமீர் விசாரணைக்குப் பின்னர் நேற்று (04.10.2026) நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.



ஆந்திராவில் இருந்து கருவாடு லாரியில் கஞ்சா கடத்தல்



5 பேர் கைது

ஆந்திர மாநிலத்திலிருந்து கருவாடு ஏற்றி வந்த லாரியில் ரகசியமாகப் பதுக்கி கடத்தி வரப்பட்ட சுமார் 22 கிலோ கஞ்சாவை சமயபுரம் போலீசார் பறிமுதல் செய்து, கடத்தலில் ஈடுபட்ட 5 பேரைக் கைது செய்தனர்.

ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தில் இருந்து கருவாடு லோடு ஏற்றி வந்த லாரி ஒன்றில் சுமார் 50 கிலோ கஞ்சா கடத்தப்படுவதாக திருச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு ரகசியத் தகவல் கிடைத்தது. அந்த லாரியிலிருந்து முதற்கட்டமாக 27 கிலோ கஞ்சா திண்டிவனத்தில் விற்பனைக்காக இறக்கப்பட்ட நிலையில், மீதமுள்ள கஞ்சாவுடன் லாரி திருச்சி நோக்கி வந்து கொண்டிருப்பதாக போலீசாருக்கு தெரிய வந்தது.

இதையடுத்து, மாவட்ட எஸ்.பி உத்தரவின்பேரில் சமயபுரம் காவல் நிலைய ஆய்வாளர் குணசேகரன் தலைமையில், உதவி ஆய்வாளர்கள் முரளி சுரேஷ், சரவணன் சுமன் மற்றும் காவலர்கள் அடங்கிய குழுவினர் சமயபுரம் எல்லைக்கு உட்பட்ட முக்கியச் சாலைகளில் தீவிர வாகன தணிக்கையில் ஈடுபட்டனர்.

அந்த வகையில், திருச்சி சென்னை தேசிய நெடுஞ்சாலையில் இருந்து சமயபுரம் நால்ரோடு பகுதிக்கு செல்லும் சர்வீஸ் சாலையில், ரெட்டியார் மஹால் அருகே சந்தேகத்திற்கு இடமான வகையில் வந்த லாரியை போலீசார் மறித்து விசாரணை நடத்தினர். அப்போது லாரியில் இருந்தவர்கள் முன்னுக்குப் பின் முரணாகப் பதிலளித்ததால், சந்தேகமடைந்த போலீசார் லாரியை முழுமையாகச் சோதனை செய்தனர்.

அந்த சோதனையில், கருவாடு மூட்டைகளுக்கு இடையே கஞ்சா பொட்டலங்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து லாரியில் இருந்த 5 பேரையும் பிடித்துச் சமயபுரம் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று தீவிர விசாரணை நடத்தினர்.

காவல்துறையின் சிறப்பான நடவடிக்கை: 4 பேர் கைது 98 சவரன் நகைகள் மீட்பு





கன்னியாகுமரி ராஜாக்கமங்கலம் பகுதியில் நடந்த வீடு உடைப்பு திருட்டில் 160 CCTV & 35 CDR ஆய்வின் மூலம் 4 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு 98 சவரன் நகை மீட்கப்பட்டது. மேலும் தொடர்புடை யவர்களை கண்டறிய காவல்துறை தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகிறது.


ஜெம் வீரமணி சிறுமிகளுக்கு பாலியல் துன்புறுத்தல் கொடுத்த வழக்கில்

குற்றத்திற்கு உடந்தையாக இருந்த 3 ஓட்டுநர்கள் கைது

சென்னை பெருநகர காவல் விபச்சார தடுப்பு பிரிவில் பெறப்பட்ட Pendrive-ல் ஜெம் கிரணைட் தொழிலதிபர் வீரமணி என்பவர் சாந்தி மற்றும் மகேந்திர சிம்ஹன் ஆகியோரது வீட்டின் படுக்கையறையில் சிறுமி ஒருவருடன் பாலியல் குற்றத்தில் ஈடுபட்டுள்ளதாக Pendrive-மில் பதிவாகியிருந்த வீடியோவில் வீரமணி பாலியல் குற்றத்தில் ஈடுபட்டது தெரியவந்ததின் அடிப்படையில், சென்னை பெருநகர மத்திய குற்றப்பிரிவு, விபச்சார தடுப்பு பிரிவில் வழக்குப்பதிவு செய்யப்பட்டது. இது தொடர்பாக ஜெம் கிரணைட் தொழிலபதிர் வீரமணி மற்றும் அவருக்கு உடந்தையாக இருந்த சாந்தி மற்றும் மகேந்திர சிம்ஹன் ஆகியோர் கைது செய்யப்பட்டும் இவ்வழக்கில் வீரமணி சிறுமியிடம் ஆபாசமாக இருப்பது போன்ற மேலும் ஒரு வீடியோவை வைத்திருந்தது தொடர்பாக அதைப்பற்றி காவல்துறைக்கு தகவல் தெரிவிக்காத குற்றத்திற்காக கணேசன் என்பவரும் கைது செய்யப்பட்டு, மேற்படி நால்வரும் சிறையில் அடைக்கப்பட்டனர்.

காவல்துறை இயக்குநர் / படைத் தலைவர் (DGP/HoPF), தமிழ்நாடு அவர்களின் உத்தரவின் பேரில் மேற்படி போக்சோ வழக்குகளில் விசாரணை மேற்கொள்ள சிறப்பு புலனாய்வுக் குழு (Special Investigation Team) அமைக்கப்பட்டு தீவிர புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஏற்கனவே ஜெம் வீரமணி மீது நான்கு வழக்குகள் நிலுவையில் உள்ள நிலையில் மேலும் ஒரு வழக்கு 02.10.2026 பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணையில் உள்ளது.



மேற்படி ஐந்து வழக்குகளில் புலன் விசாரனை மேற்கொண்டதில், ஜெம் கிரணைட் தொழிலபதிர் வீரமணியின் பாலியல் துன்புறுத்தல்களுக்கு சிறுமிகளை அழைத்து வந்து உடந்தையாக இருந்த குற்றத்திற்காக, ஜெம் கிரணைட் வீரமணியின் ஓட்டுநர்கள் 1.லாசர், 2.பார்த்திபன் மற்றும் 3.பாபு ஆகியோர்கள் அடையாளம் காணப்பட்டு இன்று (05.10.2026) கைது செய்யப்பட்டனர்.

மேற்கண்ட ஐந்து வழக்குகளில் சம்மந்தபட்ட ஜெம் கிரணைட் தொழிலபதிர் வீரமணியின் பாலியல் துன்புறுத்தல் குற்றத்திற்கு உடந்தையாக இருந்த ஓட்டுநர்கள் Gem Granite அதிபர் வீரமணியிடம் லாசர் என்பவர் 23 வருடங்களாகவும், பாபு என்பவர் 8 வருடங்களாகவும் மற்றும் பார்த்திபன் என்பவரும் பணிபுரிந்து வந்துள்ளனர். ஜெம் வீரமணியின் குற்ற செயல்களுக்கு துணை போனது பற்றியும், அது தொடர்பாக அவர்களுடைய வீடுகளில் சோதனைகள் நடத்தப்பட்டு, 8 செல்போன்கள் மற்றும் 55 ஆவணங்கள் ஆகியவை கைப்பற்றப்பட்டன. இவ்வழக்கில் தொடர்ந்து தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

Z System Intelligent Controls Private Limited

Intelligence in Automation

We are prominent Industrial automation solution provider having strong knowledge and expertise in handling automation products like PLC, HMI/SCADA, VFD, PID controllers, Field transmitter, Switches, Sensors etc.

We areconversant in handling IOT, VR & AR applications

We offer complete sales, Engineering & Application development and Commissioning support services across India.

Our Principles & Products

SIEMENS azbil TURCK



PLC,HMI,Scada,VFD,IOT Solutions, RFID



Temperature Controller, Recorders, Switch, Sensors



Sensors, Connectivity. Interface technology Analysers

AR, VR, ER Developement



Our Service



Power



Water &Waste water




Metro



SPM



Cement



Metal



Smart World

Our Clients

Contact Address

Plot No.36
27th Street
Thillai Ganga Nagar
Nanganallur
Chennai-600061
Website : www.zsystem.in

Plot No.22,23, Arihant Nagar, Tambaram
Chennai-600045.Tamilnadu, India.
Phone : 098404 53136

/zsystem.in

/zsystem_in

/z-system-intelligent-controls-pvt-ltd

தங்கம் வென்ற கோவை வீராங்கனைக்கு உற்சாக வரவேற்பு!



கோவையைச் சேர்ந்த தடகள வீராங்கனை வித்யா ராம்ராஜ் ஆசிய போட்டியில் தங்கம் வென்றார். விமானம் மூலம் கோவை வந்தடைந்த அவருக்கு அமைச்சர் ஆனந்த் மற்றும் அவரது குடும்பத்தினர் பொன்னாடை அணிவித்து பாராட்டுகளை தெரிவித்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய வித்யா ராம்ராஜ், பி.டி. உஷாவின் சாதனையை முறியடித்திருப்பது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. தற்போது ரயில்வே துறையில் பணியாற்றி வருகிறேன். மத்திய மற்றும் மாநில அரசுகள் தனக்கு அளித்த ஆதரவால் இந்த நிலையை அடைந்துள்ளேன்.

கடந்த போட்டியைவிட இந்தப் போட்டியில் கடுமையாக உழைத்தேன். 2023 ஆம் ஆண்டிலிருந்து சாதனையை முறியடிக்கும் நோக்கத்துடன் பயிற்சி மேற்கொண்டேன். பதக்கத்தை இலக்காகக் கொள்ளாமல், நேரத்தை மேம்படுத்துவதே தங்களது முக்கிய நோக்கமாக இருந்தது.

ஒலிம்பிக் வாய்ப்பு குறித்து பேசிய அவர், இந்தியா இன்னும் உலக அளவில் போட்டியிட வேண்டிய நிலையில் இருக்கிறது. தற்போதைய சாதனை தனக்கு முழுமையான நிறைவை அளிக்கவில்லை.

தமிழ்நாடு விளையாட்டுத் துறை அமைச்சர் தொடர்ந்து முழுமையான ஆதரவு அளிக்கிறார். இளம் விளையாட்டு வீரர்கள் பெற்றோர் மற்றும் பயிற்சியாளர்களை நம்பி தீவிரமாகப் பயிற்சி மேற்கொள்ள வேண்டும்

ஒரு விளையாட்டு வீரரின் வெற்றிக்குப் பின்னால் பயிற்சியாளர்களின் பங்களிப்பு முக்கியமானது. விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்படும் அங்கீகாரம் பயிற்சியாளர்களுக்கும் வழங்கப்பட வேண்டும். இது குறித்து முதலமைச்சரிடமும் எடுத்துச் சொல்லப்பட்டுள்ளது. விளையாட்டு வீரர்களுக்கு பதக்கங்கள் வழங்கும்போது பயிற்சியாளர்களுக்கும் பதக்கங்கள் வழங்கப்படும் என முதலமைச்சர் தெரிவித்துள்ளார் என்று கூறினார்

தஞ்சாவூர் மாவட்ட காவல் அலுவலகத்தில் மாதாந்திர குற்ற கலந்தாய்வு கூட்டம் திருச்சி மத்திய மண்டல காவல் துறை தலைவர் பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது





திருச்சி மத்திய மண்டல காவல்துறை தலைவர் திரு. V. பாலகிருஷ்ணன், இ.கா.ப., அவர்கள் தலைமையில், தஞ்சாவூர் மாவட்ட காவல் அலுவலகத்தில் மாதாந்திர குற்ற கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தஞ்சாவூர் சரக காவல்துறை துணைத் தலைவர் திரு. ஜியாவுல் ஹக், இ.கா.ப., அவர்கள், ஒன்பது மாவட்ட காவல் கண்காணிப் பாளர்கள், உதவி காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சிறப்பாக பணிபுரிந்த மத்திய மண்டல சரகத்திற்கு உட்பட்ட ஒன்பது மாவட்ட காவல் கண்காணிப்பாளர்களுக்கு, மத்திய மண்டல காவல்துறை தலைவர் திரு. V. பால கிருஷ்ணன், இ.கா.ப., அவர்கள் பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார்கள்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் நிலவும் குற்றச் செயல்கள், குற்றத்தடுப்பு நடவடிக்கைகள், முக்கிய வழக்குகளின் புலனாய்வு, குற்றவாளிகளை கைது செய்தல் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆய்வு செய்யப்பட்டது.



தாம்பரம், சிட்லபாக்கத்தில் பட்டா பெயர் மாற்ற லஞ்சம் வாங்கிய வருவாய் ஆய்வாளர் கைது

தாம்பரம் அடுத்த சிட்லபாக்கத்தில் பட்டா பெயர் மாற்றம் செய்ய ரூ.4,000 லஞ்சம் வாங்கிய வருவாய் ஆய்வாளரை லஞ்ச ஒழிப்புத் துறையினர் கையும் களவுமாக கைது செய்தனர்.

இச்சம்பவத்தில் வேறு யாருக்காவது தொடர்பு உள்ளதா என்பது குறித்தும் போலீசார் தீவிர விசாரணை செய்து வருகின்றனர்.

குடும்பம் ஒரு கோயில்



சி. சுபாஷ் சந்திரபோஸ்
(காவல்துறை கண்காணிப்பாளர் ஓய்வு)

தனக்குள் இயங்கும் இதயம்
தம்மை வாழவைக்கும் உதயம்

தம்மையும் தாங்கும் நெஞ்சம்
தம்மோட உடலோடு கொஞ்சும்

பெற்றோர்கள் கற்றுக்கொடுத்த பாடம்
பெண்ணின் துணையோடு ஓடும்

உடலும் உயிரும் வாழ்க்கைஓடம்
உழைப்பும் உண்மையும்
ததும்பாதகுடம்

இன்பமும் துன்பமும் மனக்கோளாறு
இளமையும் முதுமையும் வயசுகோளாறு

ஒருவனுக்கு ஒருத்தியே குடும்பம்
ஒற்றுமையான வாழ்க்கையை விரும்பும்

நண்பர்கள் நட்பு குறும்பு
நக்கலும் நையாண்டியும் தெம்பு

ஒவ்வொருவருடைய வாழ்க்கையும் நாடகமேடை
நடித்தபிறகு கழட்டும் அணியும்உடை



சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எஸ். மாலதி ஹெலன், இ.ஆ.ப., அவர்கள் **(05.10.2026)** மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில், தென் சென்னை மாவட்ட சமூக நல அலுவலகத்தின் **2** பெண் குழந்தைகளுக்கான முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்பு திட்டத்தின் கீழ் ஒரு பெண் குழந்தைக்கு **25,000/-** வீதம் **2** பெண் குழந்தைகளுக்கான **50,000/-** வைப்புத் தொகை ரசீதுகளை **6** பெற்றோர்களிடம் வழங்கினார்.

புனித தோமையர்மலை பகுதியில் உள்ள மருத்துவமனையில் பொருத்தியிருந்த காப்பர் பைப்பை வெட்டி, திருடிச் சென்ற நபர் கைது!

ரூ.35,000/ மதிப்புள்ள 35 மீட்டர் காப்பர் பைப் மீட்பு

சென்னை, கிண்டி பகுதியில் வசித்து வரும் ராம்குமார், வ/34 என்பவர் புனித தோமையர்மலை பகுதியில் உள்ள தனியார் மருத்துவமனையில் துணை மேலாளராக வேலை செய்து வருவதாகவும், கடந்த 26.09.2026 அன்று மேற்படி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் நோயாளிகளின் சுவாசத்திற்காக செலுத்தப்படும் வாயுக்கள் வரும் காப்பர் பைப்பில் கோளாறு உள்ளதாக தெரியவந்தின்பேரில், மருத்துவமனை சுற்றிலும் ஆய்வு செய்தபோது, மருத்துவமனைக்கு வெளியே வாயுக்கள் அடங்கிய டேங்கில் இருந்து அவசர சிகிச்சை பிரிவுக்கு செல்லும் சுமார் 35 மீட்டர் காப்பர் பைப்புகளை யாரோ வெட்டி திருடிச் சென்றது தெரியவந்ததாகவும், மேற்படி திருட்டில் ஈடுபட்ட நபரை கண்டுபிடித்து, காப்பர் பைப்புகளை மீட்டுத் தருமாறும் ராம்குமார் என்பவர் S-1 புனித தோமையர்மலை காவல் நிலைய குற்றப்பிரிவில் கொடுத்த புகாரின்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

S-1 புனிததோமையர்மலை காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்தும், சிசிடிவி பதிவுகளை ஆய்வு செய்தும், மேற்படி மருத்துவமனையில் இருந்து காப்பர் பைப்புகளை வெட்டி திருடிச் சென்ற எதிரி சல்மான், வ/21, தண்டலம், கோவூர், காஞ்சிபுரம் மாவட்டம் என்பவரை நேற்று (02.10.2026) கைது செய்தனர். அவரிடமிருந்து மருத்துவனையில் திருடிச் சென்ற சுமார் ரூ.35,000/ மதிப்புடைய 35 மீட்டர் நீளமுள்ள காப்பர் பைப் மீட்கப்பட்டது.



விசாரணையில் எதிரி சல்மான் மீது ஏற்கனவே வடபழனி, மாங்காடு மற்றும் தேனாம்பேட்டை காவல் நிலையங்களில் மொத்தம் 4 திருட்டு வழக்குகள் உள்ளது தெரிய வந்தது. கைது செய்யப்பட்ட எதிரி சல்மான் விசாரணைக்குப் பின்னர் நேற்று (02.10.2026) நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

நட்புடன் பழகி ஏமாற்றி கொள்ளையடித்த நபர் கைது!



தருண் என்பவர், சதீஷ்குமார் என்பவருடன் நட்புடன் பழகி அண்ணா நகரில் உள்ள சதீஷ்குமாரின் வீட்டில் தங்குவதற்கு அனுமதி பெற்று கடந்த 10 நாட்களாக தங்கி இருந்தவர் சதீஷ்குமாரின் வீட்டின் சாவி மற்றும் பீரோ லாக்கர் சாவி ஆகியவற்றை போலியாக தயாரித்து சதீஷ்குமார் வீட்டில் இல்லாத நேரத்தில் டூப்ளிகேட் சாவி மூலம் சதீஷ்குமாரின் பீரோவை திறந்து அதில் உள்ள பணம் 48 லட்சம் மற்றும் 53 சவரன் தங்க நகைகளை திருடி அவருடைய அப்பா ஸ்ரீனிவாச ராவ் இடமும், கடன் வாங்கிய நபர்களிடமும் பணத்தை கொடுத்து கடனை அடைத்துள்ளார் மீதி பணத்தில் கிண்டியில் உள்ள கிராண்ட் சோழா ஹோட்டல் மற்றும் நுங்கம்பாக்கத்தில் உள்ள தாஜ் கோரமண்டல் ஹோட்டலிலும் தங்கி ஆடம்பரமாக செலவு செய்துள்ளார். தங்க நகைகளை கோடம்பாக்கத்தைச் சார்ந்த வெங்கடேசன் என்பவரிடமும் பாரிஸில் உள்ள ராகுல் என்பவரிடமும் விற்று அந்த பணத்தையும் வைத்து ஜாலியாக செலவு செய்துள்ளார். வழக்கின் புகார்தாரர் எதிரியை கையும் களவுமாக பிடித்து கே4 அண்ணாநகர் காவல் நிலையத்தில் ஒப்படைத்ததின் பேரில் காவல்துறையினர் விசாரணை செய்து எதிரியின் அப்பாவிடம் இருந்து 15 லட்சம் பணமும் நகைக்கடைக்காரர்களிடமிருந்து 25 சவரன் தங்க நகைகளும் கைப்பற்றப்பட்டது. எதிரியை எக்மோர் ஐந்தாவது பெருநகர நீதிமன்றத்தில் ஆஜர் செய்து சிறையில் அடைக்கப்பட்டார்.

தலித்துன்னா உள்ளே விடமாட்டீங்களா? தைரியம் இருந்தா வா...

தமிழ்நாட்டை மிரள வைத்த பெண் ஐபிஎஸ் ஷானாஷ்



கள்ளக்குறிச்சி, பட்டியலின மக்கள் கோயிலுக்குள் நுழைய மறுப்பு தெரிவித்து மாற்று சமூகத்தினர் பூட்டுப் போட்ட நிலையில், அதனை உடைத்து மாவட்ட எஸ்.பி பட்டியலின மக்களை கோயிலுக்குள் அனுமதித்தார்.

கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதி குரால் கிராமம். இங்கு இந்து சமய அறநிலையத்துறைக்கு சொந்தமான ஸ்ரீ கலியுக சீனிவாச பெருமாள் கோவில் உள்ளது. இங்கு நேற்று (அக்.3) மூன்றாவது புரட்டாசி சனிக்கிழமையை சிறப்பிக்கும் வகையில், பட்டியல் சமூகத்தை சேர்ந்த பொதுமக்கள் மேல தாளங்களுடன் தாம்பூல தட்டுகளில் வழிபாட்டு பொருட்களுடன் சுவாமி தரிசனம் செய்ய சென்றனர்.

இதனை அறிந்த அப்பகுதியை சேர்ந்த மாற்று சமூகத்தினர், அவர்களிடம் கோயிலுக்கு செல்ல அனுமதியில்லை என கூறி, அங்கிருந்து உடனடியாக செல்ல வற்புறுத்தியுள்ளனர். இதனால் இரு தரப்பினரிடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

தொடர்ந்து, மாற்று சமூகத்தினர் கோயிலின் கதவை மூடி பூட்டுப் போட்டுள்ளனர். இதையடுத்து, தங்களை கோயிலுக்குள் அனுமதிக்க வேண்டும் என பட்டியலின சமூகத்தைச் சேர்ந்த மக்கள் மாலை வரை கோயிலின் நுழைவாயில் முன்பு அமர்ந்து



தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பாக தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த வந்த கள்ளக்குறிச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஷஹ்னாஸ் தலைமையிலான காவல்துறை அதிகாரிகள், கோவில் என்பது அனைவருக்கும் பொதுவானது. அங்கு யாரும் செல்லக்கூடாது என்று தடை விதிக்க முடியாது என மாற்று சமூகத்தினரிடம் நேரடியாக பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

இந்த பேச்சுவார்த்தையில் சுமூகமான முடிவு எட்டப்படாத நிலையில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் முன்னிலையில் போலீசார் கோயிலின் பூட்டை உடைத்து, பட்டியலின மக்களைக் கோயிலுக்குள் அழைத்துச் சென்று வழிபட அனுமதித்தனர். இச்சம்பவத்தால் போலீசார் மற்றும் மாற்று சமூகத்தினரிடையே கடுமையான வாக்குவாதம் நடைபெற்றது.

Owned, Published And Printed By **R.SIVAKUMAR** Printed At **CHENNAI OFFSET PRINTERS**, 19/1, 21/2, Kitabathkhan Bhandur Street, Ellis Road, Chennai - 600002. Published From No.14/88, 3rd Main Road, Venkateswara Nagar, Velachery, Chennai - 600042 Editor: **R.SIVAKUMAR**

A Journey of 15 Years

GEESYS

STABLE VOLTAGE. STABLE PERFORMANCE

Heavy-Duty Voltage Protection for Critical Industrial Loads

PROTECT YOUR EQUIPMENT FROM

- Voltage fluctuations
- Brownouts and overvoltage
- Electrical equipment failure
- Production interruptions
- Excessive heating and energy losses



ISO 9001:2015 Certified Company

IDEAL FOR

Solar Power Plants I Manufacturing Industries I Process Plants I CNC Machines
Hospitals I Data Centres I Commercial Buildings I HVAC Systems I Pumps and Motors
Critical Industrial Equipment

Book Free Consultation Today

9962012354

Info@geesysindia.com
www.geesysindia.com

NEETHIYIN NUNNARIVU TAMIL MONTHLY RNI No. TNTAM/2020/80067

26-ம் ஆண்டு

நினைவு அஞ்சலி



அப்பாவின் நினைவை நெஞ்சில் ஏந்தி அஞ்சலி செலுத்தும் கவிதை:

இருபத்தியாறு ஆண்டுகள் ஓடிவிட்டன...
நீங்கள் விட்டுச்சென்ற காலடிகள் மட்டும்
இன்னும் எங்கள் பாதையில் வாழ்கின்றன!
தோள்களில் சுமந்த உலகமும்,
சொற்களில் விதைத்த நல்வழியும்,
காலம் கடந்தும் எங்களை வழிகாட்டும்
வெளிச்சமாய் ஒளிர்கின்றன...
அப்பாவின் அன்பிற்கு ஈடேதுமில்லை...
உங்கள் நினைவுகள் எங்கள் மூச்சிருக்கும்வரை
எங்களோடு நிலைத்திருக்கும் அப்பா!!!

...நினைவால் வாடும்...

தெய்வத்திரு.

N.ராஜரெத்தினம் நாட்டாமை

அவர்கள்....

நினைவு நாள் : 08.10.2026

ராஜரெத்தினம் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள்

நவக்கொல்லைக்காடு